2012 –ஆம் ஆண்டு U.S.A மாநாட்டில் ஹுஸூர் (அய்) அவர்கள் ஆற்றிய உரை
பக்கம் 8

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எதிரிகளுடன் நடந்து கொண்ட விதம்
பக்கம் 12

இறை மன்னிப்பின் காட்சிகள்
பக்கம் 14

இஸ்முஹூ அஹ்மது என்ற முன்னறிவிப்பிற்கு ஒப்பானவர்
பக்கம் 18


மாத இதழ்

# நுபுவ்வத் வழி

www.ahmadiyyamuslimjamaat.in

Nubuwwat Vazhi | December 2021 | Issue No. 1
Ahmadiyya Muslim Jama'at, Ashura East Street, Melapalayam, Tirunelveli - 627 005,
Email: subeditor.nubuwwatvazhi@gmail.com | Mobile: +91 96297 46340

اِنِّیْ مَعَکَ یَا مَسْرُوْرُ



handwriting of the Promised Messiah[as]

## இன்னீ மஅக யா மஸ்ரூர்

மஸ்ரூரே!
நிச்சயமாக நான் உம்முடன் இருக்கிறேன்.
(தத்கிரா)



உலகளாவிய அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்
ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது
(அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)



# திருக்குர்ஆன்

اَلْمَالُ وَالْبَنُوْنَ زِيْنَةُ الْحَيٰوةِ الدُّنْيَا ۚ
وَالْبٰقِيٰتُ الصّٰلِحٰتُ خَيْرٌ عِنْدَ رَبِّكَ
ثَوَابًا وَّخَيْرٌ اَمَلًا ٤٧

பொருட்செல்வமும், மக்கட்செல்வமும் இவ்வுலக வாழ்வின் அலங்காரமாகும். ஆனால் (இவற்றால் செய்யப்படும்) நிலையான நற்செயல்கள்தான், உமது இறைவனிடத்தில் நற்கூலி கிடைப்பதற்கும் எதிர்காலத்தின் எதிர்பார்ப்புக்கும் சிறந்தவை. (18:47)



# ஹதீஸ்

عَنْ أَبِي هُرَيْرَةَ قَالَ قَالَ رَسُولُ اللَّهِ
صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ إِنَّ اللَّهَ لَا يَنْظُرُ
إِلَى صُوَرِكُمْ وَأَمْوَالِكُمْ وَلَكِنْ يَنْظُرُ
إِلَى قُلُوبِكُمْ وَأَعْمَالِكُمْ (رواه مسلم)

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் உங்களது உருவத்தையோ செல்வத்தையோ பார்ப்பதில்லை. மாறாக உங்கள் உள்ளங்களையும் செயல்களையும் பார்க்கிறான். (முஸ்லிம்)

# எனக்கு கட்டுப்பட்டவாறு என்னைப் பின்பற்றுங்கள்


## வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள்

இந்த இறையில்லத்தை (மனித உள்ளம்) சிலைகளை விட்டும் புனிதமானதாக்கவும் அதனை தூய்மைப்படுத்தவும் ஒரு ஜிஹாதின் அவசியம் இருக்கின்றது. மேலும் அந்த ஜிஹாதின் வழிதனை நான் உங்களுக்கு கூறுகிறேன. நீங்கள் அதன்படி செயல்படுவீர்கள் என்றால் அந்த சிலைகளை உடைத்தெறிவீர்கள் என்று நான் உங்களுக்கு உறுதி கூறுகிறேன். மேலும் இவ்வழியை நான் சுயமாக உருவாக்கியுள்ளேன் என்று நான் கூறவில்லை. மாறாக அதனை அறிவிக்கும்படி இறைவன் எனக்கு கட்டளையிடுகிறான். மேலும் அவ்வழி யாது? எனக்கு கட்டுப்படுங்கள், என்னைப் பின்பற்றுங்கள். இக்குரல் புதியதொரு குரல் அல்ல. மக்காவை சிலைகளைவிட்டும் தூய்மைப்படுத்துவதற்காக ரஸூல் (ஸல்) அவர்களும்,

قُلْ إِنْ كُنْتُمْ تُحِبُّوْنَ اللّٰهَ فَاتَّبِعُوْنِيْ يُحْبِبْكُمُ اللّٰهُ

“நீங்கள் அல்லாஹ்வை நேசிக்கின்றீர்கள் என்றால் என்னைப் பின்பற்றுங்கள். அப்போதுதான் அல்லாஹ் உங்களை நேசிப்பான் என்று கூறுவீராக” என்று கூறி இருந்தார்கள்.

இதைப் போன்றே நீங்கள் என்னைப் பின்பற்றுவீர்களாயின் உங்களுக்குள் இருக்கும் சிலைகளை உடைத்தெறியும் தகுதியினைப் பெறுவீர்கள். பல்வேறு விதமான சிலைகளால் நிரம்பியுள்ள உள்ளத்தை தூய்மைப்படுத்தும் தகுதியினைப் பெறுவீர்கள். உங்களது ஆன்மாவை தூய்மைப்படுத்த நாற்பது நாட்கள் தனித்திருந்து தவம்புரிய வேண்டிய தேவை இல்லை. ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சஹாபாக்கள் இது போன்ற எந்த தனித்திருத்தலையும் மேற்கொள்ளவில்லை. அல்லது சூ.ஃபிகளின் திக்ர் முறைகளையோ பின்பற்றவில்லை. மாறாக, அவர்களிடம் வேறு ஒன்று இருந்தது. அவர்கள் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸ்ஸல்லம் அவர்களுக்கு கட்டுப்படுவதில் திளைத்திருந்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஒளி கட்டுப்படுதல் என்னும் நரம்புகளின் வழியாக சஹாபிகளின் உள்ளங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அது அல்லாஹ் அல்லாத அனைத்து சிந்தனைகளையும் தகர்த்து விட்டது. அவர்களின் உள்ளங்கள் இருளுக்குப் பதிலாக இறையொளியால் நிரம்பியது. நினைவில் கொள்ளுங்கள்! இப்போழுதும் அதே வழிமுறைதான் பயன்படும். எப்பொழுது வரை இறைவனின் வழிதனில் வருகின்ற ஆன்மீக ஒளி உங்கள் உள்ளங்கள் மீது விழவில்லையோ அப்போது வரை ஆன்மாவில் தூய்மை ஏற்பட முடியாது. மனித உள்ளம் இறையொளி இறங்கும் இடமாகும். எனவேதான் மனித உள்ளம் இறையில்லம் என அழைக்கப்படுகிறது.



முக்கியமான பணி என்னவெனில் அதில் காணப்படும் அனைத்து சிலைகளையும் அகற்றுவது ஆகும். பின்னர் அதில் அல்லாஹ் மட்டுமே எஞ்சி இருக்கும் நிலை உருவாகி விட வேண்டும். ஒரு ஹதீஸில் கூறப்பட்டுள்ளது.


الله الله في اصحابي எனது சஹாபிகளின் உள்ளங்களில் அல்லாஹ் மட்டுமே இருக்கிறான்.

அல்லாஹ் மட்டுமே உள்ளத்தில் இருக்கிறான் என்பது அத்வைத கோட்பாட்டை மனிதன் பின்பற்றி ஒவ்வொரு நாயையும் கழுதையையும் இறைவனாக கருத வேண்டும் (நவூதுபில்லாஹ்) என்பதல்ல. அவ்வாறன்று! அசல் நோக்கம் என்னவெனில், ஒவ்வொரு செயலின் குறிக்கோளும் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதாக இருக்க வேண்டுமே தவிர வேறு ஒன்றும் இருக்கக் கூடாது. எதுவரை இறைவனின் அருள் கிடைக்கவில்லையோ அதுவரை இந்நிலையை அடைய முடியாது.

(மல்.ஃபூஸாத் பாகம் 1 பக்கம் 173-174)

# வளர்ச்சிக்கான இரண்டு வழிமுறைகள்

## முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் அல்ஹாஜ் ஹக்கீம் நூருத்தீன் (ரலி) அவர்கள்



மற்றொரு விஷயத்தின் பக்கம் உங்களது கவனத்தை ஈர்க்க நான் நாடுகிறேன். அது என்னவெனில் ஜமாஅத்தை சேர்ந்தவர்களின் எண்ணிக்கை அதிகம் உள்ள சில இடங்களில் வளர்ச்சியின் வேகம் குறைந்து விட்டது. அதற்கான காரணத்தை நான் அறிகின்றேன். இதற்காக இரண்டு பரிகாரங்களை மேற்கொள்ளுமாறு உங்களுக்கு நான் அறிவுரை கூறுகிறேன். முதலாவது பரிகாரம், பொறுப்பாளர்கள் வேதனையுடன் துஆ செய்ய வேண்டும். சூரிய மற்றும் சந்திர கிரகணங்களின் போது முஸ்லிம்கள் தொழுகை நடத்துவதை நீங்கள் அறிவீர்கள். கிரகணம் நிகழும்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பெரிதும் பதற்றப்பட்டார்கள். திருக்குர்ஆனில் கூறப்பட்டிருப்பதைப் போன்று கிரகணம் என்பது ஓர் இயற்கை நிகழ்வு என்பதை அன்னார் அறிந்தே இருந்தார்கள்.

وَالْقَمَرَ نُورًا وَقَدَّرَهُ مَنَازِلَ அவன் சந்திரனுக்கு பல நிலைகளை ஏற்படுத்தியுள்ளான் (10:6) என்று திருக்குர்ஆன் கூறுகிறது. கிரகணத்தின் போது சூரியனின் ஒளியோ அல்லது சந்திரனின் ஒளியோ மங்குவதில்லை. மாறாக அவற்றின் ஒளி பூமியை வந்தடைவது தடுக்கப்படுகிறது என்பதை அன்னார் நன்கறிந்திருந்தார்கள். இருப்பினும் அவர்கள் பெரிதும் பதற்றப்பட்டார்கள். ஏனெனில் அவர்கள் ஒரு தூதுச் செய்தியை எடுத்துரைப்பதற்காக நியமிக்கப்பட்டிருந்தார்கள். இந்த தூதுச் செய்தியை எடுத்துரைக்கும் பணியில் ஏதேனும் தடை வந்து விடக் கூடாதே என்று அவர்கள் அச்ச உணர்வு கொண்டார்கள். எனவே கிரகண நிகழ்வின்போது அன்னார் துஆ செய்தார்கள், சதகா வழங்கினார்கள், குர்பானி கொடுத்தார்கள், அடிமைகளை விடுதலை செய்தார்கள்.

முட்டாள் தத்துவவாதிகள் இந்த நுட்பமான கருத்தைப் புரிந்து கொள்ளத் தவறி விட்டனர். ஆனால் ஒரு நபி அறிகிறார். அவர் சுயமே ஒளியூட்டப்பட்டுள்ளார். இருப்பினும் கிரகணத்தின் போது சூரியன் மற்றும் சந்திரனின் ஒளி தடைபடுவதைப் போன்று அவரது ஒளி தடைபட்டு விடக் கூடாதே என்று அவர் அச்ச உணர்வு கொள்கிறார். எனவே அவர் துஆக்கள் செய்தவாறு சதகாவும் வழங்குகின்றார். வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள தடையை அகற்றுவதற்கான இரண்டாவது பரிகாரம் சதகா வழங்குவதாகும். நன்றாக நினைவில் வையுங்கள். எங்கு ஜமாஅத்தினுடைய வளர்ச்சியின் வேகம் குறைந்து விட்டதோ அங்கு பொறுப்பாளர்கள் உளூ செய்து தொழுகையில் மன்றாட வேண்டும். சதகா வழங்க வேண்டும் தனிப்பட்ட முறையில் தர்மம் வழங்க வேண்டும். அதன் மூலம் இறைவன் மகிழ்வுற்று வளர்ச்சியின் வழியில் ஏற்பட்டுள்ள தடையை அகற்றி விடலாம். நான் உங்களுக்கு சதகா வழங்குவதைக் குறித்து அறிவுறுத்துகிறேன். ஏனெனில் சதகா வழங்குதலும் அறச்செயல்களுக்காகச் செலவு செய்தலும் இறைவனின் கோபம் என்ற நெருப்பை தணித்து விடுகிறது.

(குத்பாத்தே நூர் 27.12.1910 -ல் ஆற்றப்பட்ட உரையிலிருந்து...)

# துஆவின் மேன்மை


## இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது (ரலி)

துஆ செய்வதற்கு செல்வமோ, அறிவோ, ஆற்றலோ அல்லது திறமையோ தேவையில்லை. ஒருவருக்கு கைகள் இல்லையென்றாலும் அல்லது எழுந்து அமர முடியாத அளவிற்கு முதுகு முறிந்து விட்டாலும் அப்போதும் இவற்றின் தேவையில்லாமல் மனிதனால் துஆ செய்ய முடியும். படுக்கையில் கிடந்தவாறே மனிதன் துஆ செய்யமுடியும். ஒருவரது நாவு பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டு செயலிழந்து விட்டாலும் அவரது மனதால் அவர் துஆ செய்ய முடியும். ஆனால் மனம் பாதிக்கப்பட்டுவிட்டால் மனிதன் மனிதனாக இருப்பதில்லை. அவன் உயிருள்ளவனாக அல்ல, மரணித்தவனாகவே கருதப்படுகிறான். அவனது செயல்கள் முடிவுக்கு வந்துவிடுகின்றன. எனினும் ஒருவர் மனிதனாக இருக்கின்ற நிலையில் அவரிடம் உடல் ரீதியிலான நூற்றுக்கணக்கான குறைபாடுகள் இருந்த போதிலும் அவரால் செயல்பட முடியும். அவரது அந்த செயல் துஆவாகும். இறைவன் துஆவிற்கு ஏனைய செயல்களைக் காட்டிலும் குறைவான தகுதியை வழங்கவில்லை. மாறாக மிக உயர்ந்த தகுதியை வழங்கியுள்ளான். ஜிஹாத், தொழுகை, நோன்பு போன்றவை இறைவனை மனிதனுக்கருகில் கொண்டு வருவதாக திருக்குர்ஆனில் எங்குமே நீங்கள் காண முடியாது. துஆவைத் தவிர வேறு எந்த செயலைக் குறித்தும் அவ்வாறு கூறப்படவில்லை, துன்பத்திற்கு ஆளான அடியார் நிம்மதியிழந்தவாறு துஆ செய்யும் போது அவரது துன்பத்தை அகற்ற அவர் அருகில் விரைந்து வருபவன் எவன்? அவன் அல்லாஹ்வே ஆவான் என்று திருக்குர்ஆன் கூறுகிறது. (27:63)

எனவே, துஆ செயல்களில் மிகவும் வலிமை வாய்ந்ததாகும். ஏனெனில் எந்த செயலில் அனைத்து மக்களும் பங்கு பெறமுடியுமோ, எந்த செயல் அனைவரையும் சமமாக்கி விடுகிறதோ, அதுவே வலிமை மிக்க செயலாக இருக்க முடியும். உதாரணமாக தொழுகையினை நிறைவேற்றுவதில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஒருவர் நின்று கொண்டு தொழலாம், இன்னொருவர் உட்கார்ந்தவாறு தொழலாம். நோன்பு வைப்பதற்கு ஒருவரிடம் உடல் வலு இருக்கலாம். மற்றொருவருக்கு இல்லாமல் இருக்கலாம். தப்லீக் பணியை ஒருவரால் திறம்பட செய்ய முடியும். மற்றும் ஒருவருக்கு அறிவின் குறைபாட்டின் காரணமாக அல்லது வேறு ஏதோ காரணத்தினால் தப்லீக் செய்ய முடியாமல் போக -லாம். அதைப் போன்றே ஜிஹாது செய்வதிலும், கற்பித்தலிலும், வணிகப் பரிமாற்றங்கள் செய்வதிலும் இவ்வாறு வேறுபாடுகள் காணப்படுகின்றன. இந்த அனைத்து வேறுபாடுகளும் ஏதோ ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட குறைபாடுகளை சார்ந்துள்ளன. ஆனால் துஆவின் விஷயத்தில் துஆ செய்வதற்கான விருப்பம் என்பதைத் தவிர எந்த வேறுபாடுகளையும் நீங்கள் காண முடியாது. எல்லா சந்தர்ப்பங்களிலும் எல்லோராலும் அதே பற்றுடன் அதே உருக்கத்துடன் துஆ செய்ய முடியும். பேசமுடியாத ஊமை, செவிப் புலனை இழந்த செவிடர், பக்கவாதத்தால் பீடிக்கப்பட்டு அனைத்து உணர்ச்சிகளையும் இழந்து படுக்கையில் ஒரு மாமிச பிண்டமாக வீழ்ந்து கிடப்பவர் ஆகிய அனைவரும் ஆரோக்கியமான திடகாத்திரமான மனிதனைப் போன்றே துஆ செய்ய முடியும். நகர்ந்து செல்ல முடியாத ஒரு மனிதனும் கூட இறைவனிடம் தனது இறைஞ்சுதலை செலுத்த முடியும். அதன் மூலம் தொழுகை, நோன்பு மற்றும் இறைவனின் பிற கட்டளைகளை செய்கின்ற ஒருவரைப் போன்றே இறையருளை அவரால் ஈர்க்க முடியும். துஆ செல்வந்தரையும், ஏழையையும், உயர்ந்தவரையும், தாழ்ந்தவரையும் சமமாக்கி விடுகிறது. எனவேதான் இஸ்லாம் என்றால் துஆ, துஆ என்றால் இஸ்லாம் என்று சில சூஃபிகள் கூறியுள்ளனர்.



(ஜுமுஆ உரை பிப்ரவரி 28, 1936)



# எல்லாரிடத்தும் அன்பு எவரிடத்தும் வெறுப்பில்லை

## மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா நாஸிர் அஹ்மது (ரஹி)

ஒவ்வொரு முஸ்லிமும் ஒரு நொடிப்பொழுது நிதானமாக சிந்திக்க வேண்டிய விஷயம் இதுவாகும். எவரை தனது எஜமானராகவும், தலைவராகவும் அழைக்கின்றாரோ மேலும் எவர் அல்லாஹ்வுக்கு மிகவும் பிடித்தமானவர் என்று நம்புகிறாரோ மேலும் எவரை நேசிக்காமல் அல்லாஹ்வின் நேசத்திற்கு நாம் உரியவராக மாட்டோமோ அந்த நபி (ஸல்) அவர்களின் வழியை நாம் கைவிட்டு விடவில்லையே என்பது குறித்து ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எவரையாவது வெறுத்தார்களா? இந்த கேள்விக்கு எவர் பதிலளிப்பார்? ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எவர் மீதாவது கடினம் காட்டியிருந்தால் அது அவரை சீர்திருத்துவதற்கேயாகும். அன்னார் எவருடனும் வெறுப்புடனும் அவமதிப்புடனும் நடந்து கொண்டதாக ஒரு சான்றைக் கூட அன்னாரது முழு வாழ்விலிருந்தும் எவரும் காட்ட முடியாது. மக்களின் தீய செயல்களை அவர்கள் மிகவும் வெறுத்தார்கள் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. நாமும் கூட பாவத்தை வெறுக்க வேண்டும். இல்லையெனில் அது நமது சூழலை மாசுபடுத்தி நமது சந்ததியினரின் நல்லொழுக்க மரணத்திற்குக் காரணமாகி விடும். ஆனால் அன்னார் தீயவர்களை ஒருபோதும் வெறுக்கவில்லை. சுகவீனத்தின் காரணமாக படுக்கையை அசுத்தப்படுத்திய யூதரை அன்னார் வெறுக்கவில்லை. அன்னாரையும் அன்னாரது தோழர்களையும் பல வருடங்கள் சொல்ல முடியாத துன்பங்களுக்கு ஆளாக்கியவர்களை, அபுதாலிபின் பள்ளத்தாக்கில் பட்டினியால் மரணத்தை தழுவும் அளவுக்கு இரண்டரை வருடங்கள் முற்றுகை செய்தவர்களை அன்னார் ஒரு போதும் தாழ்வாகப் பார்த்ததில்லை. மாறாக இதே எதிரி பஞ்சத்தால் பீடிக்கப்பட்ட போது அவர்களின் வயிறுகளின் பசியைப் போக்க நபி (ஸல்) அவர்கள் அவர்களுக்கு உணவளித்ததார்கள். கீழான காழ்ப்புணர்ச்சி கொண்டவர்களைப் போன்று அன்னார் அந்த மக்களை நோக்கி 'இப்போது செத்து மடியுங்கள்' என்று கூறிவிட வில்லை மாறாக தனது இன மக்களுக்காக பரிவு காட்டினார்கள். மனித நேயம் அன்னாரின் உள்ளத்தில் பீறிட்டெழுந்தது....

எனது ஆப்ரிக்க சுற்றுப் பயணத்தின் போது சில அறிவற்றவர்கள் என்னிடமிருந்து வெறுப்பு இழைந்தோடும் அறிக்கைகளை எதிர்பார்த்தனர். நான் அவர்களிடமும் நமது கூட்டங்களுக்கு வந்திருந்த மக்களிமும் கூறினேன். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீதான நேசத்தின் மூலமாக மக்களின் மனங்களை வெற்றி கொள்ளுமாறுதான் நான் இறைவனால் கட்டளை இடப்பட்டுள்ளேன். நான் எந்த இனத்தையோ அல்லது தனிநபரையோ வெறுக்கவும் முடியாது அவர்களை தாழ்வாகப் பார்க்கவும் முடியாது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கும் அல்லாஹ்வுக்கும் அம்மக்கள் எவ்வாறு நேசத்திற்குரியர்களாக இருந்தார்களோ அவ்வாறே எனக்கும் அவர்கள் நேசத்திற்குரியவர்களே! இது எனது வாழ்வின் தனிப்பட்ட அனுபவமாகும். அதாவது எல்லா பவுதீக ஆற்றல்களைவிடவும் அன்பு அதிகமான சக்தியை உள்ளடக்கியுள்ளது. அன்பு எதனை சாதிக்க முடியுமோ அதனை எல்லா உலக சக்திகளும் சேர்ந்தாலும் சாதிக்க முடியாது. எனவே, எனது அன்பிற்குரிய அஹ்மதி சகோதரர்களே! சகோதரிகளே! முதியவர்களே! இளைஞர்களே! இந்த படிப்பினையை கருத்தில் வையுங்கள். இந்த உலகம், அதிகார மமதைப் பிடித்த உலகமாகும். அது மற்றவர்களை அழிக்கலாம், தலைகளை உடைக்கலாம். ஆனால் நீங்கள் ஒரே ஒரு நோக்கத்திற்காகவே எழுப்பப்பட்டுள்ளீர்கள். அது என்னவெனில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காக அன்பு மற்றும் கருணையைக் கொண்டு மக்களின் உள்ளங்களை வெற்றி கொள்வதாகும். அதன் மூலமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நிலைநாட்ட விரும்பிய ஏகத்துவம் உலகில் நிலைபெறும்.

(ஜுமுஆ உரை 12.06.1970)

# இறைவனுடன் உண்மையான தொடர்பு



**நான்காவது கலீஃபத்துல் மஸீஹ்**
**ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மது (ரஹி)**

ஒவ்வொருவரது பேச்சிலும் உண்மையின் எடையைப் பொறுத்து வித்தியாசங்கள் இருக்கின்றன. இது எத்தகைய உண்மை என்றால் இதனை உலகம் புரிந்தாலும் புரியாவிட்டாலும் ஏற்றுக் கொள்ளாமல் இருக்க முடியாது. ஓர் உண்மையாளரின் கூற்றில் இருக்கக் கூடிய ஆற்றலையும் வலிமையையும் ஒரு பொய்யரின் கூற்றோடு ஒப்பிட்டு பார்க்கவே முடியாது. எத்தனையோ வாய்ப் பேச்சு பேசுபவர்களையும் வீராப்பு பேசுபவர்களையும் நீங்கள் பார்த்திருப்பீர்கள். அவர்களுடைய பேச்சுகளுக்கு எந்த விளைவும் ஏற்படுவதில்லை. அவர்களிடமும் மாறுதலை ஏற்படுத்தாது. மற்றவர்களிடமும் எந்த மாறுதலையும் ஏற்படுத்தாது. வானொலியிலும் இவ்வாறு உரையாற்றுபவர்கள் பலர் வருகிறார்கள். ஆனால் அவர்களின் இந்த உரையாற்றல் மக்களிடையே எந்த மாறுதலையும் ஏற்படுத்துவதில்லை. ஆனால் இறைவனோடு தொடர்புடைய ஒருவர் கொஞ்சம் பேசினாலும் அதில் வலிமை பிறக்கிறது. இதில் மாறுதலை உருவாக்கும் சக்தி இருக்கிறது.

இது தொடர்பாக ஹஸ்ரத் முதலாவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பற்றி கூறுகிறார்கள்: என்னிடம் பலவீனம் இருந்தது. இதை நீக்குவதற்கு நீண்டகாலம் முயற்சி செய்தும் முடியவில்லை. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் என்னைப் பாரத்து இந்த பலவீனத்தை விட்டு விடுங்கள் என்று கூறாமல் பொதுவாக ஓர் அறிவுரை கூறுவார்கள். அது உள்ளத்தில் எவ்வளவு தாக்கத்தை ஏற்படுத்துமென்றால் அந்த பலவீனம் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடும். இவ்வாறு ஒரு முறையல்ல, பல முறை நடந்துள்ளது. இதே போன்று ஒரு குடிகாரர் வந்தார். அவருக்கு குடிப்பழக்கத்தை நிறுத்துவது சாத்தியமில்லாதிருந்தது. ஹஸ்ரத் முதல் கலீ∴பத்துல் மஸீஹ் அவர்களும் அந்த மனிதருக்கு அறிவுரை கூறினார்கள். குடிப்பழக்கத்திலிருந்து அவரை மீட்க முயற்சி செய்தார்கள். ஆனால் எந்த விளைவும் ஏற்படவில்லை. அந்த மனிதர் ஒருமுறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் வந்தார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பொதுவாக வழக்கம் போல் அறிவுரை செய்தார்கள். அப்போது தற்செயலாக மதுவின் தீமை பற்றி அறிவுரை கூறினார்கள். வந்தவர் குடிப்பழக்கம் உடையவர் என்பது அன்னாருக்கு தெரியாது. சில சொற்களிலேயே மதுவைப் பற்றி சில விஷயங்களைக் கூறினார்கள். இதனால் அந்த குடிப்பழக்கம் உள்ளவரின் உள்ளம் அங்கேயே தூய்மையாகி விட்டது. பிறகு நிரந்தரமாக மது அருந்துவதை அவர் வெறுத்து விட்டார்.

இதற்கு காரணம் குவ்வத்தே குதுஸிய்யா என்னும் தூய ஆற்றல் ஆகும். இது பற்றி திருக்குர்ஆனிலிருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொடர்பாக நமக்கு குறிப்பு கிடைக்கிறது. ஒருவர் எந்த அளவு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை நெருங்குவாரோ அதே அளவு இந்த "தூய ஆற்றல்" அன்னாரின் அடிமைகளுக்கும் கிடைக்கிறது. ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபிகள் எந்த தீமையை முயற்சி செய்தும் மக்களிடமிருந்து நீக்க முடியவில்லையோ அந்த தீமையை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சில சொற்கள் பிடுங்கி எறிந்து விட்டன. அன்னாரின் சஹாபிகள் இதற்கு அதிகமான சாட்சியாக இருக்கிறார்கள். சஹாபிகள் கண்ட இது 'குவ்வத்தே குதுஸிய்யா' என்ற தூய ஆற்றல்தான். இந்த ஆற்றல்தான் அவர்களிடம் வியத்தகு புரட்சியை ஏற்படுத்தியது.

ஆகவே குவ்வத்தே குதுஸிய்யா (பரிசுத்த ஆற்றல்) என்பது கற்பனை விஷயமல்ல. அது உண்மையின் ஒரு தரத்திற்குரிய பெயராகும். மனிதனுடைய அகத்தையும் புறத்தையும் முழுமையாக கைப்பற்றி விடும் உண்மை, உலகத்தின் எந்த ஆற்றலும் எதிர்த்து போட்டியிட முடியாத வலுவான உண்மையாகி விடுகிறது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் உண்மையின் இந்த தகுதியையும் அந்தஸ்தையும் பெற்றிருந்தார்கள். உண்மையின் வடிவாக விளங்கும் இறைவனுடன் தம்மை எந்த அளவுக்கு இணைத்துக் கொண்டார்கள் என்றால் உண்மையின் ஆற்றலாகிய இறைவனுடைய ஆற்றல் அன்னாரிடமிருந்து வெளிப்பட்டது.

இந்த தூய்மைப்படுத்தும் ஆற்றலைத்தான் திருக்குர்ஆன் முதலில் குறிப்பிடுகிறது. علم இல்ம் (அறிவு) மற்றும் الحكمة ஹிக்மத் (ஞானம்) ஆகியவற்றைப் பின்னரே குறிப்பிடுகிறது. இந்த நுட்பமான கருத்தை சிந்தியுங்கள் என்று நான் பலமுறை ஜமாஅத்திற்கு அறிவுரை கூறியுள்ளேன். ஹஸ்ரத் முஹம்மத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு இறைவன் வஹி அறிவித்து திருக்குர்ஆனின் வசனங்களைக் கற்றுக் கொடுத்த போது அன்னாரின் முதல் ஆற்றல் وَيُزَكِّيهِمْ வயுஸக்கீஹிம் - மக்களைத் தூய்மைப்படுத்துதல் என்பதாய் இருந்தது. அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முதலில் அல்லாஹ்வின் வசனங்களைப் படித்துக் காட்டுவார்கள். இரண்டாவது மக்களைத் தூய்மைப் படுத்துவார்கள். பிறகு அவர்களுக்கு அறிவையும் ஞானத்தையும் கற்றுக் கொடுப்பார்கள். (62:3)

(ஜுமுஆ உரை 18.10.96)

# 2012 ஆம் ஆண்டு U.S.A. ஆண்டு மாநாட்டில் மகளிர் அரங்கில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஆற்றிய உரை

**தமிழாக்கம்: A. நாஸிர் அஹ்மது**

தஷஹ்ஹுது தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு
ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கூறினார்கள்:



அல்லாஹ்வின் அருளால் நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் இன்று உங்களிடம் நேரடியாக உரையாற்றும் வாய்ப்பினைப் பெறுகிறேன். 2008 ஆம் ஆண்டு யூ.கே. ஜல்ஸாவில் உங்களிடம் நான் உரையாற்றியபோது மிக முக்கியமான ஒரு விஷயத்தின் பக்கம் உங்களுக்கு கவனமூட்டியிருந்தேன். அப்போது ஓர் உண்மையான முஸ்லிம் – அவர் ஆணாகயிருப்பினும் பெண்ணாக இருப்பினும் – அவரிடம் இருக்க வேண்டிய தனிச் சிறப்புகளைப் பற்றிக் கூறியிருந்தேன். அவை இல்லாமல் அவருக்கு எந்த முன்னேற்றமும் கிடைக்காது; அவரது நம்பிக்கை முழுமை அடையவும் முடியாது. நாம் அல்லாஹ்வின் அருளால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அறிவுரைக்கேற்ப இக்காலத்தின் இமாமிடம் பைஅத் செய்திருப்பதாக வாதிக்கின்றோம். அவர்களே வாக்களிக்கப்பட்ட மஸீஹாகவும், மஹ்தியாகவும் தோன்றி –யுள்ளார்கள். இதனால் நமது ஈமான் முழுமையானதாக உள்ளது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களை வாக்களிக்கப்பட்ட மஸீஹாகவும், இமாம் மஹ்தியாகவும் மட்டும் நாம் ஏற்றுக் கொள்ளவில்லை. மாறாக அன்னாரை ஒரு நபியுல்லாஹ்வாகவும் – அல்லாஹ்வின் நபியாகவும் ஏற்றுக் கொண்டுள்ளோம். இந்தப் பட்டத்தை நாம் அவர்களுக்கு வழங்கவில்லை. உண்மையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே வாக்களிக்கப்பட்ட மஸீஹை 'நபி' என அழைத்துள்ளார்கள்.

முஸ்லிம்கள் எல்லா நபிமார்கள் மீதும் நம்பிக்கை கொள்ள வேண்டும் என திருக்குர்ஆன் கட்டளை இடுகிறது. இதன் மூலமே ஒருவரது ஈமான் முழுமை பெற்று அதன் உச்சத்தை அடைய முடியும். எனவே, அஹ்மதிகளாகிய நாம் தனித்தன்மை பெற்றவர்களாக உள்ளோம்; உண்மையான முஸ்லிம்களாகவும் நாம் உள்ளோம். ஏனெனில் அல்லாஹ்வின் அனைத்து நபிமார்கள் மீதும் – ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்கள் முதல் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வரை – நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம். இருந்தபோதிலும், இது மட்டுமே நமது வெற்றிக்கும், இரட்சிப்பிற்கும் போதுமானதா? என்று கேட்டால் 'இல்லை' என்பதே அதற்குரிய பதிலாகும். உண்மையில் நாம் தனித்தன்மை பெற்றவர்களாவோம் என்ற விஷயம் நமது பொறுப்புகள் அதிகமாகி விட்டன என்பதை நமக்கு நினைவூட்டுகிறது. மேலும் அவற்றை நாம் நிறைவேற்றத் தவறி விட்டால் அல்லாஹ்விடம் பதில் சொல்லியாக வேண்டும்.

கடந்த 2008 ஆம் ஆண்டு ஜல்ஸாவில் நான் கலந்து கொண்டபோது உங்களிடம் மிக முக்கியமான விஷயம் குறித்து எடுத்துரைத்தேன் என நான் குறிப்பிட்டேன். நான் கூறிய விஷயம், நீங்கள் எப்போதும் உண்மையாளர்களாய் இருந்து, நீங்கள் செய்துள்ள உடன்படிக்கைகளை

நிறைவேற்றுங்கள். உங்களது அனைத்து தகுதிகளையும், முயற்சிகளையும் பயன்படுத்தி உங்கள் மீது சுமத்தப்பட்டுள்ள பொறுப்புகளை நிறைவேற்றுங்கள். இந்தப் பொறுப்புகள் திருக்குர்ஆனும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் கூறியவையே ஆகும். இக்காலத்தில் உங்களது பொறுப்புகளை நிறைவேற்றுவதன் பக்கம் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும், அவர்களின் கலீஃபாக்களும் உங்களிடம் மீண்டும் மீண்டும் நினைவூட்டி வந்துள்ளனர்.

உண்மையில், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டுள்ள ஒவ்வோர் அஹ்மதியும் தன் மீது சுமத்தப்பட்டுள்ள பொறுப்புகளை நிறைவேற்றுவதன் பக்கம் மனப்பூர்வமாக முயற்சி செய்கிறார். அல்லாஹ்வின் அனைத்து கட்டளைகளையும் ஏற்று நடப்பதாக வாக்குறுதி தந்துள்ளார். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அமைப்பிற்குள் வந்து விட்ட பிறகு ஒவ்வோர் அஹ்மதி ஆணும், பெண்ணும் இந்த வாக்குறுதியை புதுப்பித்துக் கொள்கிறார். இந்த வாக்குறுதியை தந்த பின்னரும் இதன் பக்கம் கவனமற்றவராக இருந்தால், அவர் தக்வாவின் வழியில் நடக்கவில்லை என்றும், அவர் அவரது மார்க்கத்தின் உண்மையை அறியவில்லை என்பதுமே பொருளாகும். இவ்வாறு தனது வாக்குறுதியை முறித்துக் கொள்பவர் தக்வாவை விட்டு விலகியவர் என்று தீர்மானித்த பின் அல்லாஹ் அவரை விட்டு விட மாட்டான்.

அல்லாஹ் கூறுகிறான்: إِنَّ الْعَهْدَ كَانَ مَسْئُولًا அதாவது 'வாக்குறுதி செய்ததைக் குறித்து மனிதன் கேட்கப்படுவான்.' (17:35)

இதன் பொருள் என்னவெனில், ஒரு நேரம் வரும். அப்போது நாம் செய்துள்ள எல்லா வாக்குறுதிகளையும் நிறைவேற்றியது குறித்து நம்மிடம் கேட்கப்படும். எனவே பைஅத்தின் வாக்குறுதியை முறித்து விடுவதால், எந்தப் பிரச்சனையும் இல்லை என நீங்கள் கருதினால், இதுபோன்ற புறக்கணிப்புகளுக்கான தண்டனையில் இருந்து தப்பிக்க முடியாது என அல்லாஹ் தெளிவாகக் கூறி விட்டான். இவ்வுலகிலோ அல்லது மறுவுலகிலோ மனிதன் அதற்கான கணக்குக் கூறியாக வேண்டும். அல்லது ஒவ்வொரு வாக்குறுதி குறித்தும் கேள்வி கேட்கப்படும். அல்லாஹ் ஒரு மனிதனிடம் கேள்வி கேட்பது என்பது அவனது கோபத்தின் ஓர் அடையாளம் என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும். அல்லாஹ்வின் கோபம் என்பது எப்படிப்பட்ட தெனில், அவனது சாபத்தைப் பெற்றுக் கொண்டவரின் வாழ்வு இவ்வுலகிலும் மறுவுலகிலும் அழிந்து விடுகிறது. இது குறித்து நாம் எப்போதும் அஞ்சவும் வேண்டும். இதனை தவிர்த்துக் கொள்ள முயற்சி செய்யவும் வேண்டும். எனவே ஒவ்வோர் அஹ்மதி ஆண், பெண்ணின் பொறுப்புகள் அதிகமாகி விட்டன. ஒவ்வோர் அஹ்மதி ஆண், பெண்ணும் தமது பொறுப்புகளை நிறைவேற்றுவதன் பக்கம் தமது முழு கவனத்தையும் வைத்துக் கொள்ள வேண்டும். இது குறித்து அஹ்மதிகளிடம் மீண்டும் மீண்டும் எனது சொற்பொழிவுகளில் நினைவூட்டிக் கொண்டே வருகிறேன். இது போன்றே லஜ்னா இமாயில்லாஹ்வின் பொறுப்புகளைக் குறித்தும் நான் மீண்டும் மீண்டும் கூறி வந்துள்ளேன். மேலும் ஒன்றை நான் இங்கு தெளிவுபடுத்த விரும்புகிறேன். எனது எந்த அறிவுரைகளும், உரைகளும் எனக்கு எதிரே அமர்ந்திருக்கும் மக்களுக்கு மட்டுமே என எண்ணக் கூடாது. எனவே நான் இங்கிலாந்திலுள்ள அல்லது ஜெர்மனியிலுள்ள அல்லது வேறெந்த இடத்திலும் உள்ள பெண்களுக்கு உரையாற்றும் போது அது உங்களுக்குப் பொருந்தாது என நினைக்கக் கூடாது. உண்மையில் நான் என்ன கூறினாலும், எந்த இடத்தில் வைத்துக் கூறினாலும்.,

*இங்கு நான் ஒன்றை தெளிவுபடுத்த விரும்புகிறேன். எனது எந்த அறிவுரைகளும், உரைகளும் எனக்கு எதிரே அமர்ந்திருக்கும் மக்களுக்கு மட்டுமே என எண்ணக் கூடாது. எனவே நான் இங்கிலாந்திலுள்ள அல்லது ஜெர்மனியிலுள்ள அல்லது வேறெந்த இடத்திலும் உள்ள பெண்களுக்கு உரையாற்றும் போது அது உங்களுக்குப் பொருந்தாது என நினைக்கக் கூடாது. உண்மையில் நான் என்ன கூறினாலும், எந்த இடத்தில் வைத்துக் கூறினாலும்., அது ஒவ்வோர் இடத்திலும் உள்ள அனைத்து அஹ்மதிகளுக்கும் கூறப்பட்டதே ஆகும்.*

அது ஒவ்வோர் இடத்திலும் உள்ள அனைத்து அஹ்மதிகளுக்கும் கூறப்பட்டதே ஆகும். இவ்வாறு தான் இதுவரை நடந்துள்ளது. எனக்கு முன்னர் வந்த கலீஃபாக்களும் தமது உரைகளில் அனைத்து அஹ்மதிகளுக்குமே அறிவுரை கூறினர். கலீஃபாவின் அறிவுரைகளைக் கேட்கின்ற அல்லது படிக்கின்ற ஒவ்வோர் அஹ்மதியும் அந்த அறிவுரைகளை நேரடியாக தன்னிடம் கூறப்பட்டவையாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

அல்ஹம்துலில்லாஹ்! M.T.A –வின் அருளைக் கொண்டு அல்லாஹ் முழு உலகிலும் கலீஃபாவுக்கும், ஜமாஅத் உறுப்பினர்களுக்கும் இடையிலான இடைவெளியைப் பெரிதும் குறைத்து விட்டான். எனவே நான் உங்களை நேரடியாகப் பார்க்க முடியா விட்டாலும்,

நீங்கள் அனைவரும் என்னை நேரடியாகக் காணவும், நான் கூறுவதைக் கேட்கவும் முடியும். நேரங்களின் வித்தியாசத்தின் காரணமாக உலகின் ஏதாவது பகுதியிலுள்ள ஒருவர், எனது உரைகளை LIVE ஆகக் கேட்க முடியவில்லை எனக் கூறினால் அவர் அறிந்து கொள்ள வேண்டும். சில மணி நேரங்களிலேயே M.T.A –வில் எனது உரை Repeat செய்யப்படுகிறது. உண்மையில், ஒரு வாரத்தில் பலமுறை Repeat செய்யப்படுகிறது. இது மட்டுமல்ல; தற்காலத்தில் Internet –ல் ஏராளமான விஷயங்களை நாம் பெற்றுள்ளோம். அனைத்து நிகழ்ச்சிகளும் Internet –ல் Upload செய்யப்படுகின்றன. 24 மணி நேரமும் அதனைப் பார்க்க முடியும். அஹ்மதிகளின் விருப்பத்தைத் தெரிந்து கொண்டு M.T.A On-demand Internet என்ற சேவையை தற்போது துவங்கியுள்ளது. அதில் அனைத்து நிகழ்ச்சிகளும் இடம் பெறுகின்றன. எனவே எந்தவோர் ஆணும் அல்லது பெண்ணும் ஒரு குறிப்பிட்ட அறிவுரையைக் குறித்து எங்களுக்குத் தெரியாது எனக் கூற நியாயமான எந்தக் காரணமும் இல்லை. மேலும் வேலைப்பளுவின் காரணமாக கலீஃபாவின் உரையை நாங்கள் கேட்காமல் விட்டு விட்டோம் என்று கூறவும் அவர்களால் முடியாது. இந்த அனைத்து நவீன வசதிகளும் அல்லாஹ்வின் அருட்களாகும். இதன் மூலம் கலீஃபாவும் ஜமாஅத்தும் ஒருவரையொருவர் நெருங்கி விட்டனர்.

எனினும் ஏதாவது ஓர் அஹ்மதி இந்த நவீன வசதிகளில் இருந்து பயன் பெறவில்லை என்றால், அது அவரது பலவீனமாகும். மேலும், அவர் தனது வாக்குறுதிகளை நிறைவேற்றுவதன் பக்கம் போதிய கவனம் செலுத்தவில்லை என்றே பொருளாகும். ஒரு பக்கம் அஹ்மதிகள் தமது வாக்குறுதிகளையும், உடன்படிக்கைகளையும் நிறைவேற்றுவதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும்; அதே நேரத்தில் அவர்கள் அதிகமாக இஸ்திக்ஃபாரும் செய்ய வேண்டும். அதாவது அல்லாஹ்விடம் பாவமன்னிப்புத் தேட வேண்டும். அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும், மிகுந்த பரிவு காட்டுபவனுமாவான் என்ற நம்பிக்கையுடனும், உண்மையாக இஸ்திக்ஃபார் செய்பவரிடம் அவன் கருணை காட்டுகிறான் என்ற அறிவுடனும் உண்மையான முறையில் இஸ்திக்ஃபார் செய்து வர வேண்டும். இந்த முறையில் இறைவனிடம் மன்னிப்புக் கேட்கும்போது அல்லாஹ் மன்னிப்பை வழங்குவது மட்டுமல்லாது அவரது ஆன்மீக முன்னேற்றத்திற்கும் இஸ்திக்ஃபார் காரணமாகி விடுகிறது. இந்த ஆன்மீக முன்னேற்றமே அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெற்றுத் தருகிறது.

> *உலகின் ஏதாவது பகுதியிலுள்ள ஒருவர், எனது உரைகளை LIVE ஆகக் கேட்க முடியவில்லை எனக் கூறினால் அவர் அறிந்து கொள்ள வேண்டும். சில மணி நேரங்களிலேயே M.T.A -வில் எனது உரை Repeat செய்யப்படுகிறது. உண்மையில், ஒரு வாரத்தில் பலமுறை Repeat செய்யப் படுகிறது......*
>
> *எனினும் ஏதாவது ஓர் அஹ்மதி இந்த நவீன வசதிகளிலிருந்து பயன் பெறவில்லை என்றால், அது அவரது பலவீனமாகும். மேலும், அவர் தனது வாக்குறுதிகளை நிறைவேற்றுவதன் பக்கம் போதிய கவனம் செலுத்த வில்லை என்றே பொருளாகும்.*

நான் தற்போது உங்கள் அனைவரிடமும் மிக முக்கியமான விஷயம் குறித்து நினைவூட்ட விரும்புகிறேன். ஒவ்வோர் அஹ்மதிப் பெண்ணும், குமரிப் பெண்ணும் இதனை உணர்ந்து கொள்ள வேண்டும். அதாவது அவர்களுக்கு ஓர் உயர்ந்த அந்தஸ்து உள்ளது. அதனை நிலைநிறுத்திக் கொள்வது அவர்களின் கடமையாகும். ஓர் அஹ்மதிப் பெண் தனது இந்தத் தகுதியை, தான் மட்டுமே அறிந்து கொண்டால் போதாது; சுற்றியுள்ள பரந்த சமுதாயமும் இதனை அறிந்து கொள்ளுமாறு செய்ய வேண்டும். மிக முக்கியமாக நீங்கள் அனைவரும் உங்கள் குழந்தைகளுக்கு அறிவூட்ட வேண்டும்; மேலும் அஹ்மதிப் பெண்களின் உண்மையான தகுதியினை அவர்கள் உணரும்படி செய்ய வேண்டும். இதன் விளைவாக ஒரு தலைமுறையிடமிருந்து அடுத்த தலைமுறைக்கு இந்த உணர்வு பிரகாசத்துடன் எடுத்துச் செல்லப்படும். அந்த உணர்வு, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை நாம் ஏற்றுக் கொண்டிருப்பதன் நோக்கம், அல்லாஹ்வின் கட்டளைகளை ஏற்று நடப்பதும், அவனை நெருங்குவதுமே ஆகும். இவ்வாறு நடைபெற்றால் அஹ்மதிப் பெண்கள் அனைவரும் எதிர்கால சந்ததியினர் தக்வாவை மேற்கொண்டு நடப்பதற்குக் காரணமாக அமைவர். இவ்வாறு அஹ்மதிப் பெண்கள் அல்லாஹ்வுடன் நெருக்கமான தொடர்பு கொள்வதற்கு உத்திரவாதமாகவும், வழியாகவும் அமைவர். இதனைக் கருத்தில் கொண்டே ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் பெண்களுக்கு மீண்டும் மீண்டும் வலியுறுத்தி அறிவுரை கூறி வந்தார்கள். எனவே, நீங்கள் யாவரும் உங்களது தகுதியை உணர்ந்து கொள்ள வேண்டும் என நான் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

அல்லாஹ் உங்களுக்குத் தந்துள்ள இந்தத் தகுதியை வேறெந்த முந்தைய மார்க்கமோ, வேறு எந்த உலக

அமைப்போ பெண்களுக்கு வழங்கவில்லை. ஏனெனில் இஸ்லாத்தின் போதனைகள் கூறுவது என்னவென்றால், சுவர்க்கம் செல்வதற்கு உத்திரவாதம் தருகிற தகுதிகளை அல்லாஹ் பெண்களிடம் வைத்துள்ளான். இது இஸ்லாம் பெண்கள் மீது வழங்கியுள்ள தனிப்பட்ட சிறப்பான கண்ணியம் ஆகும். இந்தப் போதனைகளின் அடிப்படையில் இயல்பாகவே ஒரு கேள்வி எழும்புகிறது. சுவர்க்கம் செல்வது அவ்வளவு எளிதானதா? ஒவ்வொரு பெண்ணையும் அவள் சுவர்க்கத்தின் வாசல்களின் திறவுகோல் எனக் கூற முடியுமா? இதற்குப் பதில் என்னவெனில், நிச்சயமாக ஒவ்வொரு பெண்ணிடமும் சுவர்க்கத்தின் திறவுகோல் தரப்படவில்லை. ஒவ்வொரு பெண்ணும் சுவர்க்கம் செல்ல உத்திரவாதம் தருபவளாக நடந்து கொள்வதில்லை. உண்மையில், அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் கட்டளைகளின் அடிப்படையில் தனது சொல்லையும், செயலையும் வைத்துக் கொண்டுள்ள பெண்தான் சுவர்க்கம் செல்ல உத்திரவாதம் தருபவள் ஆவாள். இந்தப் பெண்களே தமது குழந்தைகளின் தர்பிய்யத்திற்காகக் கவலைப்படக் கூடியவர்கள் ஆவர். இத்தகைய பெண்களுக்கு அல்லாஹ்வுடனான உறவு எத்தகையதென்றால், அவர்களின் குழந்தைகளும் அது போன்ற நேசமிக்க உறவை அல்லாஹ்வுடன் ஏற்படுத்திக் கொள்ள ஆர்வம் காட்டுவார்கள். அல்லாஹ்வுடனான அவர்களின் உறவு உயிருள்ள ஒன்றாகும். அவர்களின் ஆன்மீக வாழ்வு அதிலேயே உள்ளது. இந்த ஆன்மீக இருப்பைப் பெற்றுக் கொண்டவர்கள் அதிர்ஷ்டசாலிகள் ஆவர். ஏனெனில் வேறு எந்த சமுதாயமோ, மக்களோ அவர்களை வென்று விட முடியாது. வெட்கங் கெட்ட தன்மையையும், ஒழுக்கக் கேட்டையும் தூண்டுகிற பண்பாட்டின் எந்தத் தீய தாக்கத்திற்கும் அவர்கள் ஆளாக மாட்டார்கள். அல்லாஹ்வின் கட்டளைக்கு எதிரான எந்த உலக பழக்கங்களையும், சம்பிரதாயங்களையும் மேற்கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு அவர்கள் ஆளாக மாட்டார்கள்.

அல்லாஹ் வழங்கிய உலக அருட்களை ஆகுமான முறையான வழிகளில் தேடிக் கொள்வது அனுமதிக்கப்பட்டதேயாகும். ஆனால், அவற்றை அடைவது மட்டுமே நமது நோக்கம் அல்ல. நம்பிக்கை கொண்ட ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் உலகியல் பளபளப்புகளுக்கும், பகட்டிற்கும் வெளிப்படையான கவர்ச்சிகளின் தாக்கத்திற்கும் ஆளாக மாட்டார்கள். உங்களில் எத்தனை பேர் இவ்வாறே, தான் வாழ்வதாக உண்மையுடன் கூற முடியும்? உங்களில் எத்தனை பேர் உங்களையும் உங்கள் குழந்தைகளையும் காப்பாற்றுவதற்காக உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை கொடுத்து வருவதாக நீதியுடன் கூற முடியும்? உங்களில் எத்தனை பேர் இந்த வழியில் முயற்சி செய்து கொண்டிருக்கிறீர்கள்? உண்மை என்னவெனில், பிறரை விட நீங்களே இந்தக் கேள்விகளுக்கான சரியான பதிலைத் தெரிந்தவர்கள் ஆவீர்கள். சுய பரிசோதனை சரியான முறையில் செய்யப்பட்டால் அதுவே மிகச் சரியான மதிப்பீடாக இருக்கும். லஜ்னா இமாயில்லாஹ் அமைப்போ, ஜமாஅத் அமைப்போ உங்களை மதிப்பீடு செய்வதை விட நீங்கள் உங்களை மதிப்பீடு செய்வதே சரியானதாக இருக்கும். உங்களது உண்மையான ஆன்மீக நிலை நீங்கள் தினந்தோறும் பகலிலும் இரவிலும் செய்கின்ற செயல்களிலிருந்து தெரிந்து விடுகிறது.

எனவேதான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: ''நீங்கள் இறையச்சத்துடன் வாழ்வைக் கழித்தீர்கள் என்று ஒவ்வொரு பகலும் சாட்சி கூற வேண்டும்; நீங்கள் இறைவனுக்கு அஞ்சியே பகலைக் கழித்தீர்கள் என்று ஒவ்வோர் இரவும் சாட்சி கூற வேண்டும். எவர்களது இரவும் பகலும் இவ்வாறு கழிகிறதோ அத்தகைய மக்கள் உண்மையிலேயே பேறுபெற்றவர்கள் ஆவர்.'' நான் கூறியபடி சரியான மதிப்பீடு அவரவர் சுய பரிசோதனை செய்யும் போதே பெற முடியும். லஜ்னா இமாயில்லாஹ்வின் தலைவியோ, ஜமாஅத்தின் பிற பொறுப்பாளர்களோ துல்லியமாக இதனை மதிப்பிட முடியாது. இதனைக் கேட்கின்ற அஹ்மதி ஆண்கள் நான் கூறிய இந்த விஷயம் பெண்களுக்கு மட்டுமே என நினைத்து விடாதீர்கள். இது பெண்களுக்கு எவ்வாறு பொருந்துமோ அதே அளவு ஆண்களுக்கும் பொருந்தும். இன்னும் சொல்லப்போனால், ஆண்களுக்கு இது அதிக முக்கியத்துவம் கொண்ட விஷயமாகும். ஏனெனில் ஒரு வீட்டின் ஆண் எல்லாவற்றிற்கும் முன்மாதிரியாகத் திகழ்கிறார்.

> *அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் கட்டளைகளின் அடிப்படையில் தனது சொல்லையும், செயலையும் வைத்துக் கொண்டுள்ள பெண்தான் சுவர்க்கம் செல்ல உத்திரவாதம் தருபவள் ஆவாள். இந்தப் பெண்களே தமது குழந்தைகளின் தர்பிய்யத்திற்காகக் கவலைப்படக் கூடியவர்கள் ஆவர். இத்தகைய பெண்களுக்கு அல்லாஹ்வுடனான உறவு எத்தகையதென்றால், அவர்களின் குழந்தைகளும் அது போன்ற நேசமிக்க உறவை அல்லாஹ்வுடன் ஏற்படுத்திக் கொள்ள ஆர்வம் காட்டுவார்கள்.*

இங்கு இன்னொரு விஷயத்தையும் நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். ஜமாஅத்தின் கிளை அமைப்புகளோ அல்லது ஜமாஅத் அமைப்போ ஓர் ஆண்

(தொடர்ச்சி 22 ஆம் பக்கம்...)

# ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எதிரிகளுடனும் முறையற்று நடந்து கொண்டவர்களுடனும் நடந்து கொண்ட விதம் 1

--- மவ்லானா ஹமீது கவ்ஸர், காதியான் ---

தமிழாக்கம்: மவ்லவி M. முஹம்மது சுல்தான் முஹீயுத்தீன்




- முஹம்மதே (ஸல்) தாங்கள் மிக மேலான நல்லொழுக்கத்தில் நிலைபெற்றுள்ளீர்கள். (68:5)
- நாம் உம்மை அனைத்து உலகங்களுக்கும் அருட்கொடையாக அனுப்பியுள்ளோம். (21:108)
- அல்லாஹ் உம்மை மக்களின் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பான் (5:68)
- “நபிமார்களில் சிறந்தவரே! உம்மால்தான் நாங்கள் சிறந்த சமுதாயமானோம்.”
- “நீங்கள் முன்னேறியதால்தான் நாங்களும் அடியை முன்வைத்தோம்”

இன்றைய காலக்கட்டத்தில் இஸ்லாத்திற்கு அவப்பெயரை ஏற்படுத்துவதற்காகவும், பொதுமக்களின் மனதில் அதைப் பற்றிய வெறுப்பை உண்டாக்குவதற்காகவும் இஸ்லாத்தின் எதிரிகளால் கையாளப்படுகின்ற ஆயுதங்களுள் ஒன்று அவர்கள் இஸ்லாத்தின் தோற்றுனர் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களைப் பற்றி அவதூறான நூல்களை வெளியிடுகின்றனர். மேலும் குழப்பம் ஏற்படுத்துகின்ற படங்கள் மற்றும் கார்டூன்களை அச்சிடுகின்றனர். இதனால் சில அறியாத குறைமதி கொண்ட முஸ்லிம்கள் எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் பேரணி, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுகின்றனர். நூலாசிரியர்களையும் கார்ட்டூன்கள் மற்றும் வரைபடங்கள் வெளியிடுகின்றவர்களையும் பழிக்கின்றனர். அவதூறு கூறுகின்றனர். சிலர் எந்த அளவு வன்முறையில் இறங்குகின்றனர் எனில் அவர்கள் கார்ட்டூன் வெளியிடுபவர்களைக் கொன்று விடுகின்றனர். சில முஸ்லிம் நாடுகளில் “நபித்துவத்தை இழிவுபடுத்துவதன்” தண்டனை மரணம் ஆகும். இக்கொலைகளால் இஸ்லாத்தின் எதிரிகள் கையில் இஸ்லாத்திற்கு அவப்பெயர் ஏற்படுத்தும் மற்றுமொரு சாக்குப்போக்கு கிடைத்து விடுகிறது. இதனால் அவர்கள் மேன்மேலும் இஸ்லாத்திற்கு அவப்பெயரை ஏற்படுத்துகின்றனர். மேலும் பிற மத மக்களிடையே இஸ்லாம் மற்றும் இஸ்லாத்தின் தோற்றுனருக்கெதிராக வெறுப்புணர்வை ஏற்படுத்த சிறிதும் தாமதிப்பதில்லை.


இவ்வாறான சம்பவங்கள் முன்னரும் நிகழ்ந்துவந்த போதிலும் அச்சமயங்களில் அவை பிரபல்யமடையவில்லை; ஒரு கட்டுக்குள் இருந்தன. இன்றைய தினங்களில் பரப்பும் காரணிகள் இப்படிப்பட்ட சம்பவங்களை எந்த அளவு பிரபல்யப்படுத்துகின்றன எனில் பொதுமக்கள் இஸ்லாத்தை ஓர் அநீதி இழைக்கும் மார்க்கமாக எண்ண விழைகின்றனர். ரஸூலே கரீம் (ஸல்) அவர்களை கேலி கிண்டலுக்கு ஆளாக்கும் மனிதர்கள் ஒவ்வொரு காலகட்டத்திலும் இருந்து வருகின்றனர் என்ற உண்மை அனைவரும் அறிந்ததே. எதுவரை எனில் ரஸூல் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய ஆட்சிகாலத்திலும் இருந்து வந்தனர். ஆனால் கவனத்திற்கொள்ள வேண்டிய, புரிந்து கொள்ள வேண்டிய விஷயம் யாதெனில் அப்படிப்பட்ட ரஸூலிடம் முறையற்று நடந்து கொண்டவர்களுடன் நபி (ஸல்) அவர்கள் நடந்து கொண்ட முறை என்ன? என்பதே! இப்படிப்பட்ட இக்கட்டான தருவாயில் முஸ்லிம்கள் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களது முன்மாதிரியின்படி நடந்து கொள்ள வேண்டும். ஏனெனில் அதில்தான் இஸ்லாத்தின் போதனைகள் மற்றும் நல்லொழுக்கங்களின் மேன்மை இருக்கின்றது. அல்லாஹ் திருக்குர்ஆனில் ரஸூல் (ஸல்) அவர்களை நோக்கி கூறுகின்றான்.

- ❖ முஹம்மதே (ஸல்) தாங்கள் மிக மேலான நல்லொழுக்கத்தில் நிலைபெற்றுள்ளீர்கள்(அல்கலம் 68:5)
- ❖ நாம் உம்மை அனைத்து உலகங்களுக்கும் அருட்கொடையாக அனுப்பியுள்ளோம். (21:108)
- ❖ அல்லாஹ் உம்மை மக்களின் தாக்குதல்களிவிருந்து பாதுகாப்பான் (அல் மாயிதா 5:68)

முதல் வசனத்தில் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் மிக மேன்மையான நல்லொழுக்கத்தில் நிலைபெற்றுள்ளார்கள் என்று கூறப்பட்டுள்ளது. ரஸுலே கரீம் (ஸல்) அவர்கள் ஒவ்வொரு இக்கட்டான தருவாயிலும் மிக உயர்ந்த நல்லொழுக்கத்தை வெளிப்படுத்தினார்கள் என்பதற்கு அன்னாரின் தூய வாழ்க்கையே சாட்சியாகும். எல்லா சூழ்நிலைகளிலும் நம்மவர்களும் அந்நியர்களும் அன்னாரது மிக உயர்ந்த நல்லொழுக்கத்தையே கண்டிருந்தார்கள். சில உதாரணங்கள் எடுத்துக் கூறப்படுகின்றன.

1) முஸ்லிம்களின் அன்னையான ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களிடம் சில யூதர்கள் வந்தனர். அவர்கள் "அஸ்ஸலாமு அலைக்கும்" என்பதற்குப் பதிலாக "அஸ்ஸாமு அலைக்கும் யா அபா காஸிம்" என்றார்கள். அதாவது அபுல்காஸிமே! உம்மீது அழிவு உண்டாவதாக என்பதாகும் (நவூதுபில்லாஹ்). ரஸூல் கரீம் (ஸல்) அவர்கள் பதிலுக்கு "அலைக்கும்" என்று மட்டும் கூறினார்கள். (அதாவது என்மீது நீங்கள் கூறியது உங்கள் மீதே உண்டாவதாக) என்பதாகும். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் யூதர்களிடம கூறினார்கள் "அலைக்குமுஸ் ஸாமுத்தாம்." அதாவது உங்கள் மீதே அழிவு உண்டாவதாக, உங்களுக்கு தீமை உண்டாவதாக என்பதாகும். ஹஸரத் முஹம்மது (ஸல்) அவர்கள் ஆயிஷா (ரலி) அவர்களிடம் "யா ஆயிஷா லா தகூனி ஃபாஹிஷாஹ்" என்றார்கள். அதாவது, "வன்சொற்களை விட்டும் தவிர்ந்திரு" என்பதாகும். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள்: "ஹுஸுர்! யூதர்கள் என்ன கூறினார்கள் என்பதை நீங்கள் கேட்கவில்லையா?" ரஸூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "கேட்டேன், மேலும் நான் பதிலுக்கு என்ன கூறினேன் என்பதை நீர் கேட்கவில்லையா? குல்து அலைக்கும் - நீங்கள் கூறியது உங்களுக்கே திரும்பட்டுமாக." ரஸுல் (ஸல்) அவர்கள் ஆயிஷா (ரலி) அவர்களிடம், "யா ஆயிஷா! இன்னல்லாஹ் யுஹிப்புர் ரிஃப்க ஃபில் அம்ரி குல்லிஹ் - ஆயிஷாவே! நிச்சயமாக அல்லாஹ் ஒவ்வொரு விஷயத்திலும் மென்மையை விரும்புகிறான்" என்று கூறினார்கள்.

(முஸ்லிம் - கிதாபுஸ்ஸலாம்)



ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இதே ஹதீஸைப் பற்றி கூறுகிறார்கள் "இதிலிருந்து புலப்படுவது யாதெனில் யூதர்களது வழக்கம் ரஸுல் (ஸல்) அவர்களைப் பற்றி ஒழுக்கமற்றதும் அவமரியாதையுமான வார்த்தைகளைப் பயன்படுத்தியுள்ளனர். மேலும் இதில் அவர்களது நோக்கம் என்னவெனில் ரஸுல் (ஸல்) அவர்களை இழிவுபடுத்துவதும் தாழ்த்துவதுமாகவே இருந்தது."

(தப்ஸீரே கபீர் பாகம் 2, பக்கம் 90)

கண்ணியத்திற்குரியோரே! இந்த ஹதீஸிலிருந்து இஸ்லாத்தின் எதிரிகள் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களுடைய காலகட்டத்தில் ஒழுங்கீனமாக நடந்த போதும் அன்னார் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சிறந்த நல்லொழுக்கத்தின் முன்மாதிரியை காட்டினார்கள் என்பது தெரிகின்றது. மதீனாவில் அன்னார் ஆற்றல் படைத்தவராக இருந்தார்கள். ஒருவேளை அன்னார் நாடியிருந்தால் இப்படிப்பட்ட இழிவு மற்றும் ஒழுக்கமற்று நடந்தோரை கொலை செய்ய முடிந்திருக்கும். அல்லது வேறு ஏதும் தண்டனை கொடுத்திருக்க முடியும். ஆனால் அன்னார் அவ்வாறு செய்யவில்லை. மாறாக ஹஸ்ரத் உம்முல் முஃமினீன் (ரலி) அவர்களின் வாயிலாக உலகம் உள்ளளவும் முஸ்லிம்களுக்கு "அல்லாஹ் தீய வார்த்தைகளை பேசுவதை விரும்புவதில்லை" என்பதை உணரச் செய்துள்ளார்கள். எனவே எந்த முஸ்லிமும் தீய வார்த்தைகளை பேசக் கூடாது தீய வார்த்தைகளைப் பேசுவது அல்லாஹ்வுக்குப் பிடித்தமானதல்ல.

கண்ணியத்திற்குரியோரே! மதீனாவில் ரஸூல் (ஸல்) அவர்களிடம் அவமரியாதையுடன் நடந்து கொள்வதில் மிகப்

*(தொடர்ச்சி கடைசி பக்கம்...)*

# இறை மன்னிப்பின் காட்சிகள்

1

- - - ஹஸ்ரத் மீர் முஹம்மது இஸ்மாயீல் சாஹிப் (ரலி) - - -

**தமிழாக்கம்: A. நாஸிர் அஹ்மது**




ஒருமுறை அல்லாஹ்வின் மன்னிக்கும் பண்பு குறித்து சிந்தித்துக் கொண்டிருந்தேன். இந்த விஷயத்தின் பல்வேறு அம்சங்கள் குறித்து சிந்தித்துக் கொண்டிருந்தேன். அப்போது எனது உள்ளம் ஒரு மயக்க நிலைக்கு சென்றது. மேலும் இந்த விஷயம் தொடர்பான சில காட்சிகள் என் கண்களுக்கு முன்னால் வந்தன.

இந்த அனுபவத்தை மனதில் தோன்றிய கற்பனை என்றோ அல்லது விழிப்பு நிலையில் தோன்றிய காட்சி ஓட்டம் என்றோ அல்லது ஆன்மீக காட்சி என்றோ ஒருவர் கருதிக் கொள்ளலாம். எப்படி எடுத்துக் கொண்டாலும் எண்ணங்கள் காட்சிகளாக உருமாற்றம் பெற்றன என்ற வித்தியாசத்தைத் தவிர இந்த அனுபவத்தின் பொருளிலும் அதன் அசல் நிலையிலும் எந்த வேறுபாடும் இல்லை.

நான் பார்க்கிறேன். நான் இருக்கின்ற இடத்திலிருந்து சற்று தொலைவில் மிகப் பரந்த வெளியில் திருமணம் போன்ற விஷேச நிகழ்ச்சிகளின் போது தயார் செய்யப்படுவதைப் போன்ற ஒரு மாபெரும் கதவு உள்ளது. நான் அதன் அருகில் சென்றபோது அதில் அழகிய வடிவில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருப்பதைக் கண்டேன். அதில் இந்த வசனம் பொறிக்கப் பட்டிருந்தது. كُلَّ يَوْمٍ هُوَ فِي شَأْنٍ அவன் தன்னை ஒவ்வொரு நாளும் வெவ்வேறு தோற்றத்தில் வெளிப்படுத்துகிறான். (55:30)

அந்த பெரிய கதவின் மற்ற இரு பக்கங்களிலும் கூட பல்வேறு எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்தன. அவற்றுள் ஒன்று نَبِّئْ عِبَادِي أَنِّي أَنَا الْغَفُورُ الرَّحِيمُ எனது அடியார்களிடம் கூறுவீராக. நிச்சயமாக நான் மிக்க மன்னிப்பவனும் கருணை காட்டுபவனுமாவேன் (15:50)

மற்றோரிடத்தில் இவ்வாறு எழுதப்பட்டு இருந்தது: إِنَّ رَبَّكَ وَاسِعُ الْمَغْفِرَةِ நிச்சயமாக உம்முடைய இறைவன் மன்னிப்பதில் மிகவும் தாராளமானவனாவான். (53:33)

இன்னோரிடத்தில் இவ்வாறு பொறிக்கப் பட்டிருந்தது: يَغْفِرُ لِمَن يَشَاءُ அவன், தான் நாடியவர்களை மன்னிக்கின்றான் (3:130)




இன்னும் ஓரிடத்தில்,

إِنَّ اللّٰهَ يَغْفِرُ الذُّنُوبَ جَمِيعًا ۖ
إِنَّهُ هُوَ الْغَفُورُ الرَّحِيمُ ۝٥٤

நிச்சயமாக அல்லாஹ் எல்லாப் பாவங்களையும் மன்னிக்கின்றான். நிச்சயமாக அவன் மிக்க மன்னிப்பவனும் கருணை காட்டுபவனுமாவான் (39:54)

இன்னோரிடத்தில், يَدْعُوكُمْ لِيَغْفِرَ لَكُمْ مِّنْ ذُنُوبِكُمْ அவன் உங்களை, உங்கள் பாவங்களை மன்னிப்பதற்காக அழைக்கிறான் (14:11)

சுருக்கமாக, அந்தக் கதவின் இரண்டு பக்கங்களிலும் அல்லாஹ்வின் மன்னிப்பைக் குறித்த ஏராளமான வசனங்கள் அழகிய வடிவில் பொறிக்கப்பட்டிருந்தன.

நான் பார்த்தேன். அந்தக் கதவை சிலர், காவலர்கள் போன்று சுற்றிய வண்ணம் இருந்தனர். அவர்கள் வானவர்களாக இருக்கலாம் என்று நான் நினைத்தேன். எனவே நான் அவர்களிடம், "நான் உள்ளே செல்லலாமா?" என்று கேட்டேன். அதற்கு அவர்கள் "ஆம் செல்லலாம். இன்று இறைவனின் மன்னிப்பின் பெரும் உதாரணங்கள் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன. நீங்கள் சென்று அவற்றைப் பார்க்கலாம். எனினும் உங்களுடன் எங்களின் ஒரு அதிகாரப்பூர்வ வானவர் வருவார்" என்று கூறினர்.

பிறகு அவர்கள் தங்களுடன் பணி செய்கின்ற ஒருவரை என்னுடன் செல்லுமாறு பணித்தனர். மேலும் அவரது பெயர் கு.ஃப்ரான் என்றும் கூறினர். அதன் பொருள் மன்னிப்பு என்பதாகும். மேலும் அவர் என்னை நியாயத் தீர்ப்பு நடைபெறும் பரந்த மைதானத்தை சுற்றிக் காட்டுவார் என்றும் கூறினர். மேலும் அவர்கள் என்னிடம் தொடர்ந்து இஸ்திக்.ஃபார் ஓதிக் கொண்டிருக்குமாறும் நான் காண்கின்ற எதனைக் குறித்தும் விமர்சனம் செய்யக் கூடாதென்றும் என்னிடம் கூறினர்.

அவர்கள் கூறிய வழிகாட்டல்களைக் கேட்ட பின்னர் நான் கணக்கெடுப்பு நடைபெறும் பரந்த வெளியின் பக்கம் திரும்பினேன். கு.ஃப்ரான் எனது கைகளைப் நன்கு பற்றிக்கொண்டிருந்தார். நாங்கள் பறந்து கொண்டிருப்பது போன்ற உணர்வே எனக்கு இருந்தது. நாங்கள் எங்கு செல்ல நினைக்கின்றோமோ அங்கு சில நொடிகளில் எங்களால் சென்று விட முடிந்தது.

அவ்வாறு பயணத்தில் சென்று கொண்டிருக்கும் போது நான் பார்த்தேன், கண்ணுக்கு எட்டிய தூரம் வரை மக்கள் கூட்டம் இருந்தது. அவர்களுள் ஒரு சிலர் மட்டுமே உடையணிந்திருந்தனர். மற்ற அனைவரும் நிர்வாணமாக இருந்தனர். இங்கொன்றும் அங்கொன்றுமாக பல்வேறு குழுக்களாக திரள் திரளாக அவர்கள் இருந்தனர். ஒவ்வொரு கூட்டத்தின் நடுவிலும் ஒரு தராசு இருந்தது. ஆக, கண்ணுக்கு எட்டிய தூரம் வரைக்கும் மக்கள் கூட்டமும், தராசுகளும், வானவர்களுமே தென்பட்டனர்.


ஆனால், அங்கு எந்தவித கூச்சலோ குழப்பமோ இல்லை. மரணித்தவர்கள் எழுப்பப்பட்டது போன்று காணப்பட்டது. எவருக்கு அனுமதி தரப்பட்டதோ அவர் மட்டுமே பேச முடிந்தது. ஆனால் அங்கு மவுனமான முணுமுணுப்பு கேட்டது. யா க.்.பூர், யா சத்தார், யா க.்.ப்பார் (மன்னிப்பவனே, குறைகளைத் திரையிடுபவனே, மிக்க மன்னிப்பவனே) என்ற சத்தம் மெல்லிய குரலில் கேட்டுக் கொண்டே இருந்தது. எப்போதாவது எவரது குரலாவது பொருத்தமற்ற முறையில் உயர்ந்து விட்டால் உடனே பெரும் சப்தத்துடன் ஒரு முரசு ஒலிப்பது போன்று கேட்கும். அதில் இவ்வாறு கூறப்படும்.

وَخَشَعَتِ الْأَصْوَاتُ لِلرَّحْمٰنِ فَلَا
تَسْمَعُ إِلَّا هَمْسًا ﴿١٠٩﴾

அளவற்ற அருளாளனின் குரலுக்கெதிராக பிற குரல்கள் எல்லாம் அடங்கி விடும். எனவே முணுமுணுப்பைத் தவிர வேறெதனையும் நீர் கேட்க மாட்டீர் (20 : 109)

இந்த முரசு கொட்டியதும் இரவு வேளைகளில் கபருஸ்தான்களில் இருப்பது போன்ற ஒரு இனம் புரியாத மயான அமைதி ஏற்பட்டு விடும். இவ்வாறு நாங்கள் பயணம் செய்து கொண்டேயிருந்தோம். நாங்கள் களைப்படையும் வரை இதே காட்சிகள் தொடர்ந்தது. இந்த கட்டத்தில் குப்.்.ரான் என்னிடம் கூறினார். இதோ அல்லாஹ்வின் அரியாசனம் நம் முன்னே இருக்கிறது. நான் உயரே பார்த்த போது ஒளிமயமான ஒரு நிலையைக் கண்டேன்.

உடனே, எனக்கு மிகவும் பயமும் திகைப்பும் ஏற்பட்டது. நான் நடுங்க ஆரம்பித்தேன். எனது தொண்டை இறுகியது. மேலும் நான் உணர்ந்தேன். அல்லாஹ்வின் அரியாசனம் அந்த பரந்த மைதானத்தில் எல்லா இடங்களிலிருந்தும் சமதூரத்தில் இருந்ததை நான் உணர்ந்தேன். மேலும் அந்த அரியாசனத்தில் இருந்து வெளியிடப்படும்




கட்டளைகள் எல்லா இடங்களிலும் மிகத் தெளிவாகக் கேட்டது. எந்த அளவுக்கெனில் அந்த கட்டளைகள் எங்களுக்கு அருகிலிருந்து பிறப்பிக்கப்படுவது போன்று இருந்தது. ஏராளமான மலக்குகள் அந்த அரியாசனத்தை சுற்றி வந்தனர். அவர்களுள் சிலர் கூறினர்.

اَللّٰهُمَّ اِنَّا نَسْتَغْفِرُكَ لِلَّذِيْنَ آمَنُوْا அல்லாஹ்வே நம்பிக்கை கொண்டவர்களுக்காக நாங்கள் உன்னிடம் மன்னிப்பை வேண்டுகிறோம்.

இன்னும் சில மலக்குகள்

رَبَّنَا اغْفِرْ مَنْ فِي الْأَرْضِ எங்கள் இறைவனே! பூமியில் உள்ள ஒவ்வொருவரையும் நீ மன்னிப்பாயாக!

இன்னும் சில மலக்குகள், رَبِّ اغْفِرْ وَارْحَمْ அல்லாஹ்வே மன்னிப்பாயாக! மேலும் கருணை காட்டுவாயாக! (23:119)

இன்னும் சில மலக்குகள் யா க.்.பூர், யா ரஹீம் – மன்னிப்பவனே, கருணை மிக்கவனே என்ற இறைப் பண்புகளைத் துதி செய்த வண்ணம் இருந்தார்கள். இன்னும் சில மலக்குகள் அல்லாஹ்வின் பண்புகளை யா அ.்.புவுன், யா க.்.பூர், யா சத்தார், யா க.்.ப்பார் (பாவங்களை துடைப்பவனே, மிக்க மன்னிப்பவனே, குறைகளை மறைப்பவனே, மன்னிப்பவனே) என்று அந்த பண்புகளை கூறியவாறு துதி செய்தார்கள். இவ்வாறு இந்த மலக்குகள் எல்லாம் பல்வேறு திக்குகளையும்

இறைப் பண்புகளையும் துஆக்களையும் செய்தவாறு அரியணையின் ஒரு பக்கத்தில் இருந்து வந்து மறுபக்கம் மறைந்தவாறு இருந்தனர்.

அதே நேரத்தில் அங்கு மகிழ்ச்சியும் குதூகலமும் நிரம்பிய சூழல் நிலவியது. ஏனெனில் அன்றைய நாள் மன்னிப்பின் நாள் ஆகும். பாவம் செய்த ஒவ்வொருவரின் முகத்திலும் நம்பிக்கையும் புன்னகையும் தவழ்ந்தது. மக்களின் செயல்கள் எடை போடப்பட்டன. அவர்களின் குறைகளும் பலவீனங்களும் மன்னிப்பின் அருட்களை கொண்டு ஈடுசெய்யப்பட்டன. இன்றைய நாள் கணக்கெடுப்பில் எளிமை உள்ள நாளாகும். ஏனெனில் இன்றைய நாள் பாவங்களை துடைப்பவன் மற்றும் மிக்க மன்னிப்பவன் என்ற பண்புகள் தோற்றமளிக்கும் நாளாகும்.

கிராமன் காதிபீன்கள் (மனிதனின் செயல்களை பதிவு செய்யும் மலக்குகள்) தமது பதிவேடுகளை சமர்ப்பிக்கும் பணியில் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர். ரிஸ்வான் என்ற சுவர்க்கத்தின் மலக்கும், மாலிக் என்ற நரகத்தின் மலக்கும் அவ்வப்போது சர்ச்சைகள் செய்து கொண்டனர். ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக இன்றைய நாள் இறுதித் தீர்ப்பு நாள் ஆகும். இறுதியில் எல்லா விவகாரங்களுக்கும் மிக்க மன்னிப்பவனும் மேலான கருணை காட்டுபவனுமால் தீர்ப்பு வழங்கப்பட்டு விடும்.

நான் அங்குமிங்கும் சுற்றிக் கொண்டு இருந்தேன். அப்போது கு.ஃப்ரன் என்னிடம் கூறினார். "நாம் செல்வோம். நான் சிலரை உமக்கு காண்பிக்கிறேன். அவர்களை நீர் அடையாளம் கண்டு கொள்வீர். மேலும் அல்லாஹ்வின் மன்னிப்பை வெளிப்படுத்தும் சில சம்பவங்களையும் காண்பிப்பேன். இவற்றை சாதாரண மக்கள் அறிந்திருக்கமாட்டார்கள். மற்றபடி இந்த கணக்கெடுப்பும் தீர்ப்பு வழங்குதலும் தொடர்ந்து கொண்டேயிருக்கும். அதனையே இந்த வசனம் كُلَّ يَوْمٍ هُوَ فِي شَأْنٍ அவன் தன்னை ஒவ்வொரு நாளும் வெவ்வேறு தோற்றத்தில் வெளிப்படுத்துகிறான் என்று குறிப்பிடுகிறது." (55:30)

மேலும் கு.ஃப்ரான் கூறினார். "இன்றைய நாள் மன்னிப்பின் தோற்றம் வெளிப்படும் நாளாகும். கணக்கெடுப்பின் வேறு சில நாட்களும் உள்ளன. அவற்றில் திகைப்பூட்டும் அல்லாஹ்வின் சாபமும் முழுமையான அதிகாரமும் வெளிப்படும் நாட்களும் உள்ளன. ஆனால் இந்த நாட்கள் அனைத்தும் அல்லாஹ்வின் அந்த பண்புகளுக்கு உரித்தான மக்களின் நிலைமைகள் மற்றும் செயல்களுக்கு ஏற்ப வெளிப்படும். அல்லாஹ்வின் கருணைக்கு எல்லையே கிடையாது. ஆம், தண்டனையும் உண்டு. அது நீதியின் அடிப்படையில் மட்டுமே இருக்குமே தவிர அநீதியுடன் இருக்காது.

பின்பு கு.ஃப்ரான் கூறினார்: "நான் இப்போது உமக்கு உமது இறைவனின் கருணையின் விளக்கமான அடையாளங்கள் சிலவற்றைக் காட்டுகின்றேன். அவை உமது எஜமான் மற்றும் படைப்பாளனின் மீதான உமது நம்பிக்கையும் நேசமும் வளர்வதற்கு காரணமாய் அமையும். அதன் மூலம் எப்பவுமே உமது செயல்களினால் விரக்தியும் ஏமாற்றமும் அடைகின்ற நீர், உமது இறைவனின் உன்னதமான கருணை மற்றும் மன்னிப்பை பற்றி அறிந்துகொள்ளலாம். அதுவே ஒவ்வொரு பாவிக்கும் நம்பிக்கை தருகிறது. அதுவே ஒவ்வொரு குற்றவாளிக்கும் ஆறுதலாக இருக்கிறது. மேலும் அதில் தான் குறைகள் திரையிடுதலும் ஈருலக மன்னிப்பும் இருக்கிறது" என்று கூறியவாறு கு.ஃப்ரான் என்னை மேலும் அழைத்துச் சென்றார்.


(தொடரும்)

# 'இஸ்முஹு அஹ்மது' என்ற முன்னறிவிப்பிற்கு ஒப்பானவர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களே!

இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ்
ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது (ரலி)

1

தமிழாக்கம்: மவ்லவி R. அப்துல்லாஹ்



எனது கொள்கை என்னவென்றால்,

يَّاْتِيْ مِنْۢ بَعْدِى اسْمُهٗٓ اَحْمَدُ எனக்குப் பின்னர் வரப்போகின்ற அஹ்மது என்னும் பெயரைக் கொண்ட ஒரு தூதரைப் பற்றி.... (61:7) இந்த வசனமானது வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்களுடன் தொடர்புடையதாகும். மேலும் அஹ்மது என்பவர் அன்னாரே ஆவார்கள். ஆனால் இதற்கு நேர்மாற்றமாக அஹ்மது என்பவர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஆவார்கள் என்றும், அன்னாரைத் தவிர்த்து வேறொரு நபரை அஹ்மது என்று கூறுவது நபி (ஸல்) அவர்களை அவமதிப்பதாகும் என்றும் கூறப்படுகிறது. ஆனால் நான் எதுவரை சிந்தித்துக் கொண்டே செல்கிறேனோ அந்த அளவுக்கு எனது நம்பிக்கையும் வலுவாகிக் கொண்டே செல்கிறது. மேலும் குர்ஆனில் வந்துள்ள அஹ்மது என்ற சொல் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களையே குறிக்கும் என்பதிலே நான் ஈமான் வைத்திருக்கிறேன். நான் இதற்கு சாதகமாக இறைவன் அருளால் ஆதாரங்களை வைத்துள்ளேன். மேலும் உலகத்திலுள்ள அனைத்து ஆலிம்கள் மற்றும் ஃபாஸில்கள் முன்பு இதைக் கூறத் தயாராக இருக்கிறேன். எந்த அளவுக்கு என்றால் இதற்காக வெகுமதியையும் கொடுக்கக் கூட தயாராக இருக்கிறேன். எவரேனும் ஒருவர் எனது ஆதாரங்களை தவறு என்று நிரூபித்து விட்டாலோ, மேலும் திருக்குர்ஆன் மற்றும் நம்பத்தகுந்த ஹதீஸ்களைக் கொண்டு அஹ்மது என்பவர் ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் பெயராக இருந்தது. மாறாக அன்னாரின் பண்பு அல்ல. மேலும் அஹ்மது என்ற நபருக்காக எந்த அடையாளங்கள் திருக்குர்ஆனில் வந்துள்ளதோ அவை யாவும் ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களைப் பற்றியதாகும், மேலும் இந்த முன்னறிவிப்பானது எனக்கு பொருந்துகிறது என்று ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள் என்பதை நிரூபித்து விட்டாலோ, அவருக்கு இருசாராரும் சம்மதித்துக் கொள்ளும் ஒரு குறிப்பிட்ட தொகையை வழங்கத் தயாராக இருக்கிறேன்.

ஒரு விஷயத்தை நன்றாக நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை அஹ்மது என்று கூறுவதினால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை அவமதித்ததாக ஆகி விடாது. மேலும் இதனால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அஹ்மது இல்லை என்றும் ஆகி விடாது. நபி (ஸல்) அவர்கள் அஹ்மதாக இருந்தார்கள். நிச்சயமாக இருந்தார்கள். ஆனால் அஹ்மது என்பது அன்னாரின் பண்பாக இருந்ததே அல்லாமல் அன்னாரின் பெயர் அல்ல. மேலும் எவரொருவர் அஹ்மது என்பது அன்னாரின் பண்பு அல்ல என்று கூறுகிறாரோ அவர் பொய்யர் ஆவார். ஏனென்றால் இது சஹீஹ் ஆன ஹதீஸ்கள் மூலம் நிரூபணமாகிறது. நபி (ஸல்) அவர்கள் அஹ்மது இல்லை என்றால் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எவ்வாறு அஹ்மதாக ஆக முடியும்? ஏனென்றால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எதையெல்லாம் பெற்றார்களோ அவை யாவும் நபி (ஸல்) அவர்களின் சீடனாக இருந்ததினாலேயே பெற்றார்கள். ஆனால் இவ்வாறிருந்தும் கூட ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பெயர் அஹ்மதாக இருந்தது என்று கூறுவது சரியல்ல. மேலும் இந்த கூற்றின் மூலமாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அவமதிக்கப் படுகிறார்கள் என்ற அஹ்மதி அல்லாதோரின் கூற்று தவறானதும், தேவையற்றதுமாகும். இதில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் எந்த அவமதிப்பும் இல்லை. ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களை, மூஸா (அலை) என்று கூறுவதினால் ஹஸ்ரத நபி (ஸல்) அவர்களை அவமதித்ததாக ஆகி விடுமா!? அல்லது ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களை, இப்ராஹீம் (அலை) என்று கூறுவதினால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு அவமதிப்பு ஏற்பட்டு விடுமா!? அவ்வாறு இல்லை என்றால், பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ்

(அலை) அவர்களை அஹ்மது என்று கூறுவதினால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை எவ்வாறு அவமதித்ததாக ஆகி விடும்?

இன்ன முன்னறிவிப்பு ஒரு நபரை சார்ந்து இருக்கிறது என்று சொன்னால், அது ஆதாரங்களைக் கொண்டே அறியப்படுகிறது. ஆதாரங்கள் அனைத்தும் இந்த முன்னறிவிப்பானது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைக் குறித்தே வந்துள்ளது என்பதை நிரூபிக்கிறது என்றால் இதில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எந்த காரணத்தைக் கொண்டு அவமதிக்கப்படுகிறார்கள்? ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பெயர் அஹ்மது இல்லை என்று கூறுவதில் அன்னாரை அவமதித்ததாக ஆகி விடாது. ஏனென்றால் எதுவரை ஒரு பெயருக்கேற்ற குணாதிசியங்கள் ஒருவரிடம் இருப்பதில்லையோ அதுவரை குணமில்லாமல் வெறும் பெயர் மட்டும் இருப்பதில் எந்தப் பலனும் இல்லை. பெயர் என்பது கண்ணியத்தை வழங்கக்கூடிய ஒரு விஷயம் அல்ல. பாருங்கள், சிலரின் பெயர் அப்துர் ரஹ்மான் மற்றும் அப்துர் ரஹீம் என்றுள்ளது. ஆனால் அவர்களின் வேலையோ அப்துஷ் ஷய்த்தானின் வேலையாக இருக்கிறது. இதே போன்று சிலரின் பெயர் ஷரீ.ஃப் ஆக இருக்கிறது ஆனால் உண்மையில் அவர்கள் தீயவர்களாகவும், ஒழுக்கமற்றவர் -களாகவும் இருப்பர். ஆகவே, தாய் தந்தையர் வைக்கக்கூடிய பெயரானது கண்ணியத்தை வழங்கக்கூடிய ஒரு விஷயம் அல்ல. நாம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைக் குறித்து, அவர்களிடம் அஹ்மது என்ற அந்தப் பண்பு இல்லை என்று கூறினால் இது அன்னாரை அவமதிப்பதாகும். ஆனால் அன்னாரின் பெயர் அஹ்மது இல்லை என்று கூறுவதில் நிச்சயமாக அன்னாரை அவமதித்தல் ஆகும் என்று கூற முடியாது. மாறாக இது எதார்த்தமான ஒன்று என்றே கூறப்படும்.

ஆகவே பெயர் என்பது சிறப்பைப் பெற்றுத் தராது. மாறாக பணியே சிறப்பைப் பெற்றுத் தருகிறது என்றிருக்கும் போது நபி (ஸல்) அவர்களின் பெயர் அஹ்மது இல்லை என்று ஏற்றுக் கொள்வதில் என்ன அவமதிப்பு இருக்க முடியும்? ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் பெயர் முஹம்மது இல்லை என்றாலும் மாறாக வேறொரு பெயராக இருந்தது என்றால், இதில் அவர்கள் அவமதிக்கப்-பட்டவர்களாக ஆகி விடுவார்களா? அல்லது அவர்களின் அருட்களில் ஏதேனும் குறைபாடு ஏற்பட்டு விடுமா? அவர்களுக்கு எந்த பெயர் இருந்தாலும் அதுவே அருளுக்குரியதாக இருக்கும். இன்று இந்த உலகம் முஹம்மது என்ற பெயரில் எவ்வாறு தன்னை அர்ப்பணித்துள்ளதோ அவ்வாறே அந்த பெயரிலும் தன்னை அர்ப்பணித்திருக்கும். ஏனென்றால் மக்கள் அன்னாரின் பெயரில் தன்னை அர்ப்பணித்துக் கொள்வதில்லை. மாறாக உண்மையில் அவர்களின் பணியின் மீது தன்னை அர்ப்பணித்துக் கொள்கின்றார்கள். ஆகவே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பெயர் அஹ்மது இல்லை, ஆம், அஹ்மது என்ற பண்பு அவர்களிடம் காணப்படுகிறது என்று கூறுவதினால் இது அன்னாரை அவமதித்தல் ஆகும் என்று எவரொருவர் கூறுவாரோ அவர் முட்டாளாவார்.

திருக்குர்ஆனில் அஹ்மதை குறித்துக் கூறப்பட்டுள்ள வசனங்களை நான் படித்து விட்டேன், அதில் அஹ்மது என்ற




பெயரை குறித்து வந்துள்ளது. தற்போது நான் இறையருளால் இந்த வசனத்தில் கூறப்பட்டுள்ள அஹ்மது என்பவர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹே ஆவார்கள் என்பதையும் மேலும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அஹ்மதிய்யத் எனும் பண்பின் காரணமாகவே இந்த பெயரைச் சார்ந்தவர்களாக இருக்கிறார்கள். இல்லை என்றால் அஹ்மது என்று எந்த மனிதரை குறித்து செய்தி கூறப்பட்டுள்ளதோ அவர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களேயாவார்கள் என்பதையும் கூறுகின்றேன்.

அல்லாஹ் கூறுகின்றான்:

سَبَّحَ لِلّٰهِ مَا فِی السَّمٰوٰتِ وَمَا فِی الْاَرْضِ ۚ وَهُوَ الْعَزِيْزُ الْحَكِيْمُ ۝٢
يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا لِمَ تَقُوْلُوْنَ مَا لَا تَفْعَلُوْنَ ۝٣ كَبُرَ مَقْتًا عِنْدَ اللّٰهِ
اَنْ تَقُوْلُوْا مَا لَا تَفْعَلُوْنَ ۝٤ اِنَّ اللّٰهَ يُحِبُّ الَّذِيْنَ يُقَاتِلُوْنَ فِیْ سَبِيْلِهٖ
صَفًّا كَاَنَّهُمْ بُنْيَانٌ مَّرْصُوْصٌ ۝٥ وَاِذْ قَالَ مُوْسٰی لِقَوْمِهٖ يٰقَوْمِ لِمَ
تُؤْذُوْنَنِیْ وَقَدْ تَّعْلَمُوْنَ اَنِّیْ رَسُوْلُ اللّٰهِ اِلَيْكُمْ ؕ فَلَمَّا زَاغُوْۤا
اَزَاغَ اللّٰهُ قُلُوْبَهُمْ ؕ وَاللّٰهُ لَا يَهْدِی الْقَوْمَ الْفٰسِقِيْنَ ۝٦

பொருள்: வானங்களிலும், பூமியிலுமுள்ளவை எல்லாம் அல்லாஹ்வின் தூய்மையை எடுத்துரைக்கின்றன. அவன் வல்லமையுள்ளவனும், நுண்ணறிவுள்ளவனுமாவான். நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் செய்யாததை ஏன் சொல்கிறீர்கள்? நீங்கள் செய்யாததை நீங்கள் சொல்வது, அல்லாஹ்வின் பார்வையில் மிக்க வெறுக்கத்தக்கதாகும். உருக்கப்பட்ட ஈயத்தால் இணைக்கப்பட்ட (உறுதி வாய்ந்த) ஒரு கட்டடத்தைப்போல் அமைத்து, அவன் வழியில் (வலிமையான) வரிசைகளாக அணி வகுத்துப் போர் செய்பவர்களை நிச்சயமாக அல்லாஹ் நேசிக்கின்றான். மூஸா தம் சமுதாயத்தினரிடம்: நான் உங்களிடம் அனுப்பப்பட்ட அல்லாஹ்வின் தூதர் என்பதனை நீங்கள் அறிந்திருந்தும், நீங்கள் ஏன் என்னைத் துன்புறுத்துகின்றீர்கள்? என்று கூறிய போது (நிகழ்ந்ததை நினைத்துப் பாருங்கள்). எனவே அவர்கள் (நேரான பாதையிலிருந்து) விலகிய போது, அல்லாஹ்வும் அவர்களின் உள்ளங்களை விலகச் செய்து விட்டான். மேலும் கட்டுப்படாத மக்களுக்கு அல்லாஹ் நேர்வழி காட்டுவதில்லை.

ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் சம்பவத்திற்கு பிறகு ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் ஒரு சம்பவத்தை அல்லாஹ் கூறுகிறான்: அதாவது மர்யமின் மகன் ஈஸா (அலை) அவர்கள் பனூ இஸ்ரவேலர்களுக்கு கூறினார்கள், 'பனூ இஸ்ரவேலர்களே! நான் அல்லாஹ்வின் புறமிருந்து தூதராக உங்கள் பக்கம் அனுப்பப்பட்டுள்ளேன். மேலும் எனக்கு முன் தவ்ராத்தில் கூறப்பட்டுள்ளதை உண்மைப்படுத்த வந்துள்ளேன். மேலும் எனக்கு பிறகு வரக்கூடிய தூதரை குறித்து உங்களுக்கு நற்செய்தி வழங்குகிறேன். அவரது பெயர் அஹ்மது ஆகும்.

தற்போது இங்கு எழும் கேள்வி என்னவென்றால், ஹஸ்ரத் ஈஸா அலை அவர்களுக்கு பிறகு அஹ்மது என்ற பெயரில் வந்த தூதர் யார்? என்பதாகும். எனது தனிப்பட்ட வாதம் என்னவென்றால், அஹ்மது என்பது ஹஸ்ரத் மிர்ஸா சாஹிப் அவர்களே ஆவார்கள். இதனை நான் வெறும் வாதமாக செய்து விடவில்லை. மாறாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது நூல்களில் இவ்வாறே எழுதியுள்ளார்கள். மேலும் மிர்ஸா சாஹிப் தான் அஹ்மது ஆவார்கள் என்று ஹஸ்ரத் முதல் கலீ∴பத்துல் மஸீஹ் (ரலி) அவர்களும் கூறினார்கள். தர்ஸுக்காக எடுக்கப்பட்ட அன்னாரின் குறிப்புகளிலும் இவ்வாறே எழுதப்பட்டுள்ளது. மேலும் இந்த வசனத்தை சார்ந்தவர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹே ஆவார்கள் என்பது எனது ஈமான் ஆகும். ஆம் நான் முதன்முதலில் இந்த விஷயத்தை ஹஸ்ரத் முதல் கலீ∴பத்துல் மஸீஹ் (ரலி) அவர்களிடமிருந்து கேட்ட போது நான் ஏற்றுக் கொள்ள வில்லை. மேலும் இது சம்பந்தமாக பல வாதங்களும் செய்யப்பட்டு வந்தது. ஆனால் நான் இதை குறித்து சிந்தித்த போது அல்லாஹ் எனது உள்ளத்தை திறந்து விட்டான். மேலும் தகர்க்க முடியாத ஆதாரங்களையும், தெளிவான சான்றுகளையும் வழங்கினான். இவ்வாறு நான் இந்த சிந்தனையை ஏற்றுக் கொண்டேன்.

இந்த வசனங்களில், முதலில் அல்லாஹ் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களைக் குறித்து கூறுகிறான். அதாவது அவர் தனது சமுதாய மக்களிடம் வந்த போது அவர்களின் சமுதாயம் (அன்னாருக்கு) இன்னல்களை தந்தது. இதற்கு அவர் (ஹஸ்ரத் மூஸா அலை), “நான் உங்களுக்காக இறைவன் புறமிருந்து தூதராக அனுப்பப்பட்டுள்ளேன். என்னை ஏற்றுக் கொள்ளுங்கள்” என்று கூறினார். ஆனால் அவர்கள் ஏற்றுக் கொள்ளாமல் விலகியபோது அல்லாஹ் அவர்களின் உள்ளங்களை கோணலாக்கி விட்டான். இதற்கு பிறகு அல்லாஹ் ஹஸ்ரத் மூஸா அலை அவர்களுக்குப் பிறகு வந்த அனைத்து நபிமார்களைக் குறித்து கூறாமல் விட்டு விட்டு ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களைக் குறித்து மட்டும் கூறுகிறான். இதற்குக் காரணம், எவ்வாறு ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்குப் பிறகு 1300 ஆண்டுகள் கழித்து ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் வருகை தந்தார்களோ அவ்வாறே மூஸாவிற்கு உதாரணமாக திகழ்ந்த ஹஸ்ரத் மாநபி (ஸல்) அவர்களுக்கு பிறகு 1300 ஆண்டுகள் கழித்து வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) வருகை தருவார்கள் என்பதை தவிர வேறு எதுவும் இருக்க முடியாது. “இஸ்முஹூ அஹ்மது” என்ற இந்த வாசகம் இதனை தெளிவுப்படுத்தி விடுகிறது. ஏனென்றால், அஹ்மது என்பது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பெயர் அல்ல. மாறாக அன்னாரின் பெயர் முஹம்மது என்பதாகும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைக் குறித்து அஹ்மது என்று கூறுகிறார்கள். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் ஒரு முன்னறிவிப்பாகக் கூறப்படும் இந்த வசனத்தைத் தவிர்த்து திருக்குர்ஆனில் வேறெங்கும் ஹஸ்ரத் மாநபி (ஸல்) அவர்களைக் குறித்து அஹ்மது என்று அழைக்கப்படவில்லை.

ஒருவேளை பிற மக்கள் கூறுவது போல ஹஸ்ரத் மாநபி (ஸல்) அவர்களின் பெயர் அஹ்மது என்று இருந்தாலும் நபி (ஸல்) அவர்களின் தாயாருக்கு வஹீ மூலமாக இந்த பெயரைக் கூறப்பட்டிருந்தால் இறைவனின் வஹீயாக திகழும் திருக்குர்ஆனில் முதலாவதாக அன்னாரின் பெயராக அஹ்மது என்று வந்திருக்க வேண்டும் மேலும் முஹம்மது என்று வந்தாலும் சில இடங்களிலாவது அவசியம் அஹ்மது என்று வந்திருக்க வேண்டும். திருக்குர்ஆன் ஒருமுறை கூட ஹஸ்ரத் மாநபி (ஸல்) அவர்களை அழைக்காத அந்த பெயர் ஓர் ஆச்சரியமான இல்ஹாமிய பெயராகத்தான் இருக்கிறது. நபி (ஸல்) அவர்களின் பெயர் அஹ்மது இல்லை என்பதற்கு இரண்டாவது ஆதாரம் என்னவென்றால், எந்த ஹதீஸிலும் நபி (ஸல்) அவர்களின் பெயர் அஹ்மது ஆகும் என்பது நிரூபணமாகவில்லை. இஸ்லாத்தின் அடிப்படை தூணாக நிற்கும் கலீமா ஷஹாதத்திலும் கூட முஹம்மது ரசூலுல்லாஹ் என்றே கூறப்படுகிறது. அஹ்மது ரஸூலுல்லாஹ் என்று எப்போதும் கூறுவது கிடையாது. ஒருவேளை அன்னாரின் பெயர் அஹ்மது என்று இருந்தாலும் கலிமாவை குறித்த ஏதேனும் ஒரு அறிவிப்பிலாவது “அஷ்ஹது அன்ன அஹ்மது ரஸூலுல்லாஹ்” என்று வந்திருக்க வேண்டுமே. ஐந்து வேளை பாங்கிலும் “முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்” என்றே முழக்கமிட்டு அன்னாரின் தூதுத்துவத்தை அறிவிக்கப்படுகிறது. ஒருபோதும் அஹ்மது ரஸூலுல்லாஹ் என்று கூறப்படுவதில்லை. தக்பீரிலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பெயராக முஹம்மது என்றே வருகிறது. மேலும்



வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களுடன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்) அவர்களின் தந்தைவழி பாட்டனார் ஹஸ்ரத் சாஹிப் ஸாதா மிர்ஸா ஷரீஃப் அஹ்மது (ரலி) அவர்கள் தமது சிறிய வயதில்

தருத் ஷரீ.்.பிலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை முஹம்மது என்ற பெயரை கொண்டே நினைவூட்டப்படுகிறது. இதே பெயரைக் கொண்ட தூதரின் மீதே அல்லாஹ்வின் ரஹ்மத் இறக்கப்படுகிறது.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கடிதங்கள் இருக்கின்றன. அவை அனைத்திலும் கூட அன்னார் தமது கையெழுத்து இடக்கூடிய இடத்தில் முஹம்மது என்ற பெயரின் முத்திரையே வைக்கப்பட்டுள்ளது. எந்தவொரு கடிதத்திலும் அஹ்மது என்ற பெயரை குறிப்பிடவில்லை. பிறகு நபித்தோழர்களின் கூற்றுகள் ஹதீஸ்களில் இடம்பெற்றுள்ளன. ஆனால் எந்த நபித்தோழரும் அன்னாரை ஒரு முறையாவது அஹ்மது என்ற பெயரில் அழைத்ததாக நிரூபணமாகவில்லை. அவர்கள் பரஸ்பரம் பேசக்கூடிய கூற்றிலும் கூட இந்த பெயர் வந்ததில்லை. மேலும் அன்னாருக்கு அஹ்மது என்று பெயர் வைத்ததாக வரலாற்றிலும் நிரூபணமாகவில்லை. மாறாக முஹம்மது என்ற பெயரே வைக்கப்பட்டுள்ளது என்பதே நிரூபணமாகிறது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் எதிரிகளின் வரிசையில் அன்னாரின் உறவினர்களும், சச்சாவும் இருந்தனர். அனைவரும் அன்னாரை முஹம்மது என்ற பெயரைக் கொண்டே அழைத்தனர். அல்லது விஷமத்தனமாக முஹம்மது என்ற சொல்நடையில் இருக்கும் முஸம்மம் (தூற்றப்பட்டவன்) என்ற பெயரில் அழைத்தனர்.

ஆக எந்தவகையில் சிந்தித்தாலும் திருக்குர்ஆனில் இருந்தும், ஹதீஸிலிருந்தும், கலிமாவிலிருந்தும், பாங்கில் இருந்தும், தக்பீரிலிருந்தும், தருதிலிருந்தும், அன்னாரின் கடிதங்களிலிருந்தும், ஒப்புதல் வாக்குமூலங்களிலிருந்தும், வரலாற்றிலிருந்தும், நபித்தோழர்களின் கூற்றுகளிலிருந்தும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பெயர் அஹ்மது என்று அல்லாமல் முஹம்மது என்றே நிரூபணமாகிறது. இந்த அளவுக்கு ஆதாரங்கள் இருந்தும் அன்னாரின் பெயர் அஹ்மது என்று எவ்வாறு கூற முடியும்? அன்னாரின் பெயர் அஹ்மது என்று இருந்தாலும் கூட மேலே கூறப்பட்ட இடங்களில் முஹம்மது என்ற பெயருடன் அன்னாரின் பெயராக அஹ்மது என்றும் வந்திருக்க வேண்டும். எங்கும் இல்லை என்றாலும் ஓரிடத்திலாவது அஹ்மது என்ற பெயரை கொண்டு அன்னாரை அழைத்திருக்க வேண்டுமே! அல்லது கலிமாவில் “அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரசூலுல்லாஹ் என்பதற்கு பதிலாக அஹ்மதர் ரசூலுல்லாஹ் என்று படிப்பதும் ஆகுமானதாக இருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு இல்லை. இது அன்னாரிடமிருந்தோ அல்லது நபித்தோழர்களிடமிருந்தோ நிரூபணமாகவில்லை. ஆக, இவ்வனைத்து விஷயங்களுக்குப் பிறகு அன்னாரின் பெயர் அஹ்மது அல்ல என்பதை ஒவ்வொருவரும் இப்போது அறிந்திருக்க முடியும்.

ஆகவே இவ்வசனத்தில் எந்த அஹ்மதை குறித்து கூறப்பட்டுள்ளதோ அது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களாக இருக்க முடியாது. ஆம், இந்த வசனத்தில் அஹ்மது என்ற தூதருடன் எந்த அடையாளங்களை குறித்து கூறப்பட்டுள்ளதோ அது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் காலத்திலே நிறைவேறியிருந்தால் அப்போது நாம் உறுதியாக இந்த வசனத்தில் கூறப்பட்டுள்ள அஹ்மது என்ற பெயரின் பொருள் அஹ்மதிய்யத் என்ற பண்பை கொண்ட தூதர் ஆவார் என்று கூறலாம், ஏனென்றால் இவ்வனைத்து அடையாளங்-களும் நபி (ஸல்) அவர்களின் மீது முழுமையாகும்போது பிறகு நாம் மற்றவருக்கு ஒப்பிட்டு கூறுவதற்கு என்ன காரணம் இருக்க முடியும்? ஆனால் இவ்வாறும் கிடையாது என்பதை நான் நிரூபிப்பேன்.

இரண்டாவதாக, இஸ்முஹூ என்ற முன்னறிவிப்பில் மற்றொருவருக்கு அதனை ஒப்பிட்டு கூற முடியாத வகையில் வேறு ஏதேனும் சொல் இருந்திருக்க வேண்டும். உதாரணமாக அவர் காத்தமுன் நபிய்யீனாக இருப்பார் என்று எழுதப்பட்டிருக்க வேண்டும். காத்தமுன் நபிய்யீன் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களே ஆவார்கள். மேலும் ஒருவர் மட்டுமே காத்தமுன் நபிய்யீன் ஆக இருக்க முடியும். ஆகவே ஒரு சில அடையாளங்கள் அன்னாரின் காலத்தில் தனது வெளிப்படையான சொல் ரீதியாக முழுமையாகவில்லை. இருப்பினும் அன்னாரைத் தவிர வேறு எவருக்கும் பொருந்தாத தெளிவான அடையாளம் இருக்கிறது என்பதை நம்மால் கூற முடியும். ஆனால் இவ்விஷயமும் (இவ்வசனத்தில்) இல்லை.

இந்த வசனத்தில் இம்முன்னறிவிப்பானது ஹஸ்ரத் காத்தமுன் நபிய்யீனை குறித்தே என்று கூறும் அளவிற்கான எந்த சொல்லும் இல்லை. மேலும் அன்னாருக்கு இம்முன்னறிவிப்பை ஒப்பிட்டு கூறும் வகையிலான வேறு எந்த சொல்லும் காணப்படவில்லை.

மூன்றாவது, அன்னாரின் பெயர் அஹ்மது என்று இல்லாமல் இருந்தும் இம்முன்னறிவிப்பை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு ஒப்பிட்டு கூறுவதாக இருந்தால் நபி (ஸல்) அவர்கள் இவ்வசனத்தில் கூறப்பட்டுள்ள அஹ்மது நானே ஆவேன் என்று தானே முன்வந்து கூறியிருக்க வேண்டும். ஆனால் இது எந்த ஹதீஸின் வாயிலாகவும் நிரூபணமாக வில்லை. உண்மையான ஹதீஸிலும், பொய்யான ஹதீஸிலும், வலுவான ஹதீஸிலும், பலவீனமான ஹதீஸிலும், மர்ஃபூஆன ஹதீஸிலும், முர்ஸலான ஹதீஸிலும் இவ்வாறு வேறு எந்த ஹதீஸிலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இவ்வசனத்தை தமக்கு ஒப்பிட்டு கூறவில்லை. மேலும் இதற்கு பொருத்தமாக தம்மை குறித்து எங்கும் கூறவில்லை. ஆக இவ்வாறு எதுவும் இல்லாதிருக்கும்போது பிறகு ஏன் நாம் இவ்வசனத்தில் கூறப்பட்டுள்ள கருத்துக்கு எதிராக இம்முன்னறிவிப்பை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு பொருத்தி கூற வேண்டும்?

நான்காவதாக, ஒரு நிர்பந்தம் ஏற்படவும் வாய்ப்பிருக்கிறது. இதன் காரணமாகவே நாம் இவ்வசனத்தை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு பொருத்தி கூறும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். அது என்னவென்றால, இஞ்சீலில் ஓர் அஹ்மது என்ற நபியைக் குறித்து மட்டுமே செய்தி கூறப்பட்டுள்ளது என்று சொன்னால், இந்நிலையில் நிச்சயமாக இது கடினமானதாக இருந்திருக்கும் அதாவது நாம் இம்முன்னறிவிப்பை வேறொரு நபருக்கு பொருத்தி கூறினோம் என்றால், பிறகு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஈஸா (அலை) அவர்களின் வாக்களிக்கப்பட்டவராக இருந்திருக்க முடியாது. ஆனால் திருக்குர்ஆனிலிருந்து ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஈஸா (அலை) அவர்களின் வாக்களிக்கப்பட்டவராக இருக்கின்றார்கள் என்பது நிரூபணமாகிறதே (என்று கூற வாய்ப்பிருக்கிறது).

ஆனால் நாம் இஞ்சீலில் இரு நபிமார்களின் வருகையை குறித்த செய்தியை காண்கிறோம். ஒரு நபியோ, அனைத்து நபிமார்களினால் வாக்களிக்கப்பட்டவராக இருக்கின்றார். அவரின் வருகை இறைவனே வருகை தந்தது போன்று இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது. மற்றொருவரோ ஈஸா (அலை) அவர்களின் இரண்டாம் வருகையாகும். முதலில் அந்த நபி வருவார் பிறகு ஈஸா (அலை) மீண்டும் வருவார் என்று கூறப்பட்டுள்ளது. இவ்விரண்டு முன்னறிவிப்பிலும் அஹ்மது என்ற பெயரே இல்லை. ஆகவே இஸ்முஹூ அஹ்மது என்ற வசனத்தை இவ்வசனத்தில் கூறப்பட்டுள்ள விஷயத்திற்கேற்ப ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு ஒப்பிட்டு கூறுவதற்குப் பகரமாக அன்னாரின் ஏதேனும் ஒரு தொண்டருக்கு ஒப்பிட்டு கூறினால் திருக்குர்ஆனின் வேறெந்த வசனமும் பொய்யாக்கப் படுவதில்லை. இதற்கு பிறகும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஈஸா (அலை) அவர்களின் வாக்களிக்கப்பட்டவராகவே இருப்பார்கள். அவ்வாறிருக்கும்போது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு பிறகு எந்த நபியும் ரசூலும் கிடையாது என்பதை நிரூபிப்பதற்காக இவ்வசனத்தின் கருத்தினை திரித்து வளைத்து ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு ஒப்பிட்டு கூற வேண்டிய காரணம் என்ன? இறை வசனத்தை மாற்றுகின்ற அளவிற்கு அவனின் வசனத்தில் கை வைப்பதாகும் என்ற இறைவன் மீதுள்ள அச்சம் உள்ளத்திலிருந்து நீங்கி விட்டதா? அப்பட்டமாக தவறான பொருளை கொடுத்து இதனின் சொற்பொருளை களங்கப்படுதுகின்றார்கள். எதுவரை உண்மை வரவில்லையோ அப்போது வரை அந்த மக்கள் ஒரு நிர்ப்பந்தத்தில் இருந்து வந்தார்கள். ஆனால் தற்போது பல்வேறு சம்பவங்கள் மூலமாக அஹ்மது என்பவர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் தொண்டரே ஆவார் என்பது நிரூபணமாகிறது. இதற்கு பிறகும் நேர்மையற்ற முறையில் செயல்படுவது நம்பிக்கை கொண்டவருக்கு அழகல்ல. (அன்வாருல் உலூம் தொகுதி 3 பக்கம் 83)

(தொடரும்)

*(11 ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...)*

அல்லது பெண்ணைக் குறித்து மதிப்பீடு செய்யும்போது, அதன் நோக்கம் உங்களுக்கு நினைவூட்டுவது மட்டுமே ஆகும். ஏனெனில், ஜமாஅத் அமைப்பை மதிக்கின்ற ஒவ்வோர் அஹ்மதியும், தனது பலவீனங்கள் வெளிப்படுத்தப்படக் கூடாது என்றே எண்ணுகிறார். எனவே, நினைவூட்டப்படும்போது அவர் தன்னை சீர்திருத்திக் கொள்வதற்கு முயற்சி செய்வார். ஜமாஅத்தின் இந்த மதிப்பீடும் அடிப்படை அம்சங்களைக் குறித்து மட்டுமே இருக்க முடியுமே தவிர, சுய பரிசோதனையின்போது அலசப்படுகிற ஆழமான அம்சங்களைக் குறித்து இருக்க முடியாது. இதன் காரணமாகத்தான் ஒருவரது இறையச்சத்தை மதிப்பிட மற்றவரது சாட்சியத்தை அல்லது சத்ரின் சாட்சியத்தைப் பெறலாம் என ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறவில்லை. அதற்குப் பதிலாக ஒவ்வோர் இரவும், ஒவ்வொரு பகலும் ஒரு மனிதரின் நடத்தைக்குச் சாட்சி பகர வேண்டும் என்றே கூறினார்கள். வேறு சொற்களில் கூறப்போனால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியது என்னவெனில், நம்முடைய அனைத்து நல்ல, தீய செயல்களையும் கண்காணித்து அவற்றைப் பதிவேட்டில் பதிவு செய்து வருகின்ற மலக்குகளின் சாட்சியத்தையே பெற வேண்டும். இறுதியாக, இந்தப் பதிவேடு அல்லாஹ்வின் முன்னால் சமர்ப்பிக்கப்படும் போது, அழகிய நற்செயல்களால் அது நிரம்பி இருக்க வேண்டும். அது அல்லாஹ்வை மகிழ்விக்கும்.

(தொடரும்...)

# ஜமாஅத்தான தொழுகையில் சமூக இடைவெளி

## காலத்தின் கலீஃபா அவர்களின் வழிகாட்டல்

ஒருவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ்(அய்) அவர்களிடம் தற்போதைய கொரோனா வைரஸ் தொற்று நோய் காரணமாக ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையினால் ஜமாஅத் ஆக தொழும் போது தொழுகையாளிகளுக்கிடையில் 1.5 மீட்டர் இடைவெளி விட்டு தொழுவதைக் குறித்த வழிகாட்டல் வேண்டினார். ஹுஸுர்(அய்) அவர்கள் 28.04.2020 தேதியிட்ட கடிதத்தில் பின்வரும் வழிகாட்டலை வழங்கினார்கள்:




நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பொன்மொழி "இன்னமல் அ∴மாலு பின்நிய்யாத்" இஸ்லாத்தில் செயல்கள் அனைத்தும் நோக்கங்களை அடிப்படையாக கொண்டதாகும். ஜமாஅத்தான தொழுகையில் தொழுகையாளிகள் தோளுக்குத் தோளும், முழங்காலுக்கு முழங்காலும், கணுக்காலுக்கு கணுக்காலும் நெருங்கி நிற்குமாறும் அவர்களுக்கு இடையில் எந்த இடைவெளியும் இருக்கக் கூடாதென்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள். இந்த அறிவுரைக்கான காரணமும் கூறப்பட்டுள்ளது. உங்களுக்கிடையில் பவுதீகமான இடைவெளி இருப்பின் அதில் ஷய்த்தான் புகுந்து உங்கள் உள்ளங்களுக்கு இடையில் வேற்றுமையை ஏற்படுத்தி விடுவான்

தற்போது நாம் கட்டாய சூழ்நிலையில் உள்ளோம். அரசுகள் தமது குடிமக்களின் நலனுக்காக நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன. அரசாங்க விதிகளின் படி ஜமாஅத்தான தொழுகைகளில் சமூக இடைவெளியை நாம் பேணுகின்றோம் என்றால், நமக்கிடையில் வேற்றுமைகள் உருவாகி விட வேண்டும் என்பதோ ஷய்த்தான் நமக்கிடையில் பிளவை ஏற்படுத்த வேண்டும் என்பதோ நமது நோக்கம் அல்ல. மாறாக நமது நோக்கம் என்னவெனில் நாம் ஒன்றுபட்டு இந்த நோய்க்கு எதிராகப் போரிடுவதும் அரசின் வழிமுறைகளைக் கடைப்பிடித்து அதிகாரிகளுக்கு ஒத்துழைப்பு தருவதும் ஆகும். எனவே இந்த நோக்கத்துடன் இந்த அவசர காலத்தில் ஜமாஅத்தான தொழுகைகளில் தொழுகையாளிகளுக்கிடையில் சமூக இடைவெளி விடுவதில் தவறில்லை.

பயணத்தில் கட்டாய சூழ்நிலையின் போது வாகனத்தில் அமர்ந்தவாறே ஜமாஅத்தான தொழுகையினை நிறைவேற்றுவதற்குத் தரப்பட்டுள்ள அனுமதியிலிருந்து நாம் இதற்கான சான்றினை பெற முடிகிறது. ஏனெனில் வாகனத்தில் அமர்ந்தவாறு தொழும் பொழுதும் தோளுக்குத் தோள், முழங்காலுக்கு முழங்கால், கணுக்காலுக்கு கணுக்கால் நெருங்கி இருக்க முடியாது. மேலும் தொழுகையாளிகளுக்கிடையில் இடைவெளியும் ஏற்பட்டு விடுகிறது. எனவே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் நடைமுறையிலிருந்து பயணத்தின் கட்டாய சூழ்நிலையின் போது இவ்வாறு செய்வது நிரூபணமாவதிலிருந்து இந்த நோயின் காரணமாக தற்போதைய கட்டாய சூழ்நிலையில் தொழுகையாளிகள் சமூக இடைவெளி விட்டு தொழுவதில் எந்தத் தவறும் இல்லை. அல்லாஹ் கருணை காட்டுவானாக! முழு உலகிலிருந்தும் இந்த கஷ்டமான சூழ்நிலையை விரைவில் அகற்றுவானாக. தொழுகின்ற அவனது அடியார்கள் தொழுகைக்குரிய அனைத்து விதிகளையும் சிறந்த முறையில் பின்பற்றியவாறு தொழக்கூடிய வாய்ப்பினை ஏற்படுத்துவானாக, ஆமீன்!"


(அல்ஹகம் 12.11.21)




"உயிரைக் கொடுப்பதால் கிடைக்கும் என்றாலும் இந்தச் செல்வம் பெறத்தக்கது."

– ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை)

ரூ. 100/-




தற்போது திருக்குர்ஆன் தமிழாக்கம் சிறு விளக்கத்துடன் புதிய வடிவில் காதியானில் இருந்து அச்சாகி வெளி வந்துள்ளது.

ரூ. 600/-

சகோதரர்கள் வாங்கி பயன் பெறுவீர்!


*(13 ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...)*

பெரியவன் அப்துல்லாஹ் பின் அபி ஸலூல், நயவஞ்சகர்களின் தலைவன் ஆவான். அவன் மதீனாவின் ஓர் அரேபிய இனமான கஸ்ரஜை சார்ந்தவனாவான். இவன் வெளிப்படையாக முஸ்லிமாக இருந்த போதிலும் உள்ளுக்குள்ளும், வெளிப்படையாகவும் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் கடுமையான எதிரியாகவும், விரோதியாகவும் இருந்தான். அவன் முஸ்லிம்களிடையே சண்டையை ஏற்படுத்தி அவர்களுக்கு இழப்பை ஏற்படுத்தும் எந்த ஒரு சந்தர்ப்பத்தையும் தவற விட்டதில்லை. மறைமுகமான சூழ்ச்சிகள் செய்வது அவனது வழக்கமாக இருந்தது. இம்மனிதன் தான் முஸ்தலிக் போரின் போது முஹம்மது (ஸல்) அவர்கள் பற்றி இவ்வாறு அறிவித்தான்:

لَئِنْ رَّجَعْنَآ اِلَى الْمَدِيْنَةِ لَيُخْرِجَنَّ الْاَعَزُّ مِنْهَا الْاَذَلَّ

அதாவது, ஒருவேளை நாம் மதீனாவிற்கு திரும்பினால், மதீனாவின் மிக கண்ணியத்திற்குரிய மனிதர் மதீனாவில் எல்லாரையும் விட இழிவான மனிதரை அங்கிருந்து வெளியேற்றி விடுவார் என்பதாகும். (63:9)

கண்ணியத்திற்குரிய மனிதர் என்று தன்னையும், இழிவான மனிதர் என்று (நவூதுபில்லாஹ்) நபி கரீம் (ஸல்) அவர்களையும் குறிப்பிட்டான். அவனது முரண்பாடான செயல்பாடுகள் இஸ்லாத்தின் வரலாற்றில் நிறைந்து காணப்படுகின்றன. அதைப் பற்றிக் கூறுவது குறைவான நேரத்தில் சாத்தியமன்று. உதாரணமாக, சிலவற்றை எடுத்துக் கூறுவேன். ஷவ்வால் மாதம் ஹிஜ்ரி 3 -ல் அதாவது மார்ச் 624 -ல் மக்கத்துக் கா.ஃ.பிர்கள் பத்ர் போரின் தோல்விக்குப் பதிலடி கொடுப்பதற்காக அபூ ஸு.ஃ.ப்யானின் தலைமையில் 3000 போர் வீரர்களைக் கொண்ட படையுடன் மதீனாவில் தாக்குதல் தொடுக்க மதீனாவிற்கு முன்னேறி வந்தனர். ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களது தலைமையில் 1000 முஸ்லிம்களைக் கொண்ட ஒரு படை அவர்களை மதீனாவின் மீது தாக்குதல் நடத்துவதிலிருந்து தடுப்பதற்காக உஹதின் போர்க்களத்தை நோக்கிச் சென்றார்கள். இப்படிப்பட்ட அபாயமான இக்கட்டான சூழ்நிலையில் அப்துல்லாஹ் பின் அபி ஸலூல் துரோகம் செய்தான். வழியில் தனது 300 வீரர்களுடன் மதீனா திரும்பி விட்டான்.

கணணியமிக்கோரே! உலகின் எல்லா நாடுகளிலும், சமுதாயங்களிலும் தேச துரோகத்திற்கான தண்டனை மரண தண்டனையே ஆகும். ஆனால் இந்த துரோகி மற்றும் ஈனனுக்கு ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் உலக ஆட்சியாளர் களைப் போன்று மரண தண்டனை விதிக்கவில்லை. மாறாக, அவனை அவனது நிலையிலேயே விட்டு விட்டார்கள். மேலும் தாங்கள் செவியுற்றுள்ளீர்கள். பனூ முஸ்தலிக் போரின் போது இதே அப்துல்லாஹ் பின் அபி ஸலூல், மதீனா சென்று கண்ணியத்திற்குரிய மனிதர் அல்லது கூட்டம், இழிவடைந்த மனிதரை அல்லது கூட்டத்தை மதீனாவிலிருந்து வெளியேற்றுவார் என்று அறிவித்திருந்தான். (தொடரும்)

Editor: A. Nasir Ahmad | Sub-Editorial: Maulavi M. Muhammad Sultan Muhiyudeen | Design & Layout: A. Abdul Nizar | Manager: A. Samsul Alam